• REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 19 | சுன்னாகம், சர்வதாரி மார்கழி ௧௯ (காந்தி ஆண்டு 80) 2-1-'49, ஞாயிறு | இதழ் 23



பாலபோதினி

அரிவரி—VIIம் வகுப்பு

★

சிறந்த

வாசிணைப்

புத்தகங்கள்

# தீண்டாமை வேண்டாம்

## சைவத்தலைவர்கள் சங்கநாதம்

"கடவுளுடைய குழந்தைகளாகிய மக்களுள் உயர்வு தாழ்வு பார்ப்பது அறிவற்ற செயலாகும். சாதி சமயம் என்ற பதங்கள் வட சொற்களானபடியால் இக் கருத்துக்கள் தமிழருடைய கலாசாரத்துக்கு முழு மாறானவை" என்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சைவர் மகாநாட்டுக்குத் தலைமைவகித்த சென்னைச் சைவசித்தாந்த மகாசமாஜத்துத் தலைவர் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்திற் பேசும்போது உணர்ச்சியுடன் குறிப்பிட்டார்.

செயலாளர் திரு. கா. அரங்கசாமி முதலியார் தீண்டாமை தீக்கிரை யாகவேண்டுமென இடித்துரைத்ததுடன் நில்லாது, சைவ ஆகமக் கொள்கைகளை யெல்லாம் நையப்புடைத்தார். அங்கு கூடியிருந்த திரளான மக்கள் இப்பேச்சுகளைக்கேட்டுப் பயனடைந்தனர். யாழ்ப்பாணத்திலும் தீண்டாமைக்குச் சாவுமணி அடிக்கப்படுகின்றதென நினைந்து மகிழ்ந்தனர்.

சென்ற வியாழக்கிழமை (30-12-48) பிற்பகல் யாழ்ப்பாணம் நகரமண்டபத்திற் சைவ பரிபாலனசபை ஆதரவில் ஒரு மாபெரும் கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்துக்குப் பிரபல நியாயதுரந்தரரும், மேற்படி சபை உப தலைவருமாகிய திரு. த. முத்துசாமிப் பிள்ளை தலைமை வகித்தார். அக்கூட்டத்தில் சைவசித்தாந்த சமாஜத் தலைவர் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரும், காரியதரிசி திரு. கா. அரங்கசாமி முதலியாரும் சொற்பொழிவாற்றினர்கள். திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் 'சமயத்தின் சாரம்' என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசமுன், தான் கூட்டத்துக்கு வருவதற்குச் சிறிதுநேரத்துக்குமுன், சைவ பரிபாலனசபைக் காரியதரிசி திரு. மு. மயில்வாகனம் அவர்கள், அக்கூட்டம் சைவபரிபாலனசபையின் ஆதரவிற் கூட்டப்பெற்றபடியால் தீண்டாதார் ஆலயப் பிரவேசத்தைப்பற்றிப் பேசக்கூடாதென்று எழுதிய கடிதத்தைக் கூட்டத் தலைவருக்குச் சமர்ப்பித்தார். தலைவர், பேச்சாளர் ஆலயப்பிரவேசத்தைப் பற்றித் தங்கள் கருத்துக்களை வெளியிடுவதற்கு ஒருவித மான ஆட்சேபமுமில்லையென்று கூறினர்.

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் 'சமயத்தின் சாரம்' என்னும் விஷயம் பற்றி ஒரு மணி நேரத்துக்கு அரியதொரு சொற்பொழிவாற்றினர். சமயமென்பது ஒருவன் வாழ்க்கைமூலம் வெளிப்படவேண்டுமே யொழிய அவன் கொள்கைகள் மூலம் வெளியிடப்படுவதால் பிரயோசனமில்லை யென்று கூறினர். (Religion is a way of life and not a bundle of doctrines) ஒருவன் சைவனுயிருந்தால் அவன் சைவ வாழ்க்கையை மேற்கொள்ளல் வேண்டும். அவ்வாழ்க்கைக்கு அத்தியாவசியமாக வேண்டியவை கடவுள் வழிபாடும், தொண்டுமாகும். கடவுள் வழிபாடென்றால், கடவுள் வழிப்படுதல் என்று பொருள்படும். பயன் கருதி வழிபடுதல், உண்மையான வழிபாடல்ல. சரியான முறையில் ஒருவன் கடவுளை வழிபட்டால், அவனுக்கு அளவற்ற சக்தி ஏற்படும். அச் சக்தியை மற்றவர்களுடைய நலத்துக்காகச் செலவிடுதலே தொண்டாகும். இப்படியே சைவப்பெரியார்கள் தொண்டாற்றினர்கள்.

"தீண்டாமையைப் பற்றிப் பேசுவதற்கு இந்தியாவிலிருந்து வந்த தங்களுக்கு அங்கு தீண்டாமை யொழிக்கப்பட்டி

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

# உலகெங்கும் ஓர் இறைவன்

## மகிழ்ச்சியே வாழ்க்கையின் சுவை

"தமிழ் மக்கள் சரித்திரத்தைப்பார்க்கும் பொழுது தெய்வக் கொள்கை சிறந்திருந்த காலத்திலேயே மக்கள் அறிவும் அமைதியும் இன்பமும் பெற்று வாழ்ந்திருக்கின்றனர் எனக் கூறுகின்றோம்." இவ்வாறு திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இளைஞர் மகாநாட்டிற் குறிப்பிட்டார். இவ்வைபவம் சென்ற மாதம் 27, 28, 29 நாட்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சென்னை சைவசித்தாந்த சமாஜத்து 43-வது ஆண்டுவிழாவின் ஆதரவில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலையில் கூட்ட நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. திரு. ம.பாலசுப்பிரமணியமுதலியார் அவர்கள் சைவர் மகாநாட்டுக்குத் தலைமைதாங்கினர்கள்.

தூத்துக்குடி பாகம்பிரியாள் கழகத் தலைவர் ஸ்ரீமதி. ச. சிவகாமியம்மாள் அவர்கள் மங்கையர் மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார்கள். இம் மகாநாட்டின் வரவேற்புத்தலைவர் ஸ்ரீமதி. தியாகராசா—சிவநாயகிஅம்மாள் தமதுபேச்சிற் குறிப்பிட்டதாவது "அறிவிற் பெரியாராகிய காந்தியடிகள் எத்தகைய பெண்ணுலகைக் காண விரும்பினர். அப் பெரியார் விரும்பியவாறு நாம் சிறந்த பெண்களாய் வாழ்தலன்றே அவரது பிரிவினை நினைந்து வருந்தும் நாம் அவருக்குச் செலுத்தும் வணக்கமாகும்."

மகாநாட்டுக்குத் தலைமை வகித்த ஸ்ரீமதி. சிவகாமி அம்மையார் தமது பேருரையிற் குறிப்பிட்டதாவது, "நகைச்சுவை இல்லாவிடில் மக்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியே இல்லை. மகிழ்ச்சி இல்லையானல்

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

# புத்தாண்டும் புன்னகையும்

## சொந்த நாட்டுக்கு மதிப்பு

30-12-48

கிறிஸ்மஸ் பண்டிகையின் அலங்கார வைபவங்களைத் தொடர்ந்து, புது வருட ஆரவாரங்களும், வேடிக்கைகளும் மிகுந்த உற்சாகத்தை யூட்டிவருகின்றது.

அடிமை வாழ்வு அகன்ற இந்நாட்டிற் சுதந்திரப் புத்தாண்டை மக்கள் குதூகலத்துடன் வரவேற்று மகிழ்வார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. சகலரின் முகங்களிலும் புன்னகை தவழ்கின்றது.

### தாய்நாட்டு அரசர்

இலங்கையின் பிரதம நீதியரசராக விளங்கிய சேர். யோன் ஹவாட் அவர்கள் தமது பதவியினின்றும் இளைப்பாறுகின்றார். அவருடைய ஸ்தானத்துக்கு நீதியரசர் விஜயவர்த்தன அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இப் பெரும் பதவியைப் பெறும் பிரதம நீதியரசர் இலங்கை ஈன்ற ஒருபுதல்தராவார். இதுபௌத்தர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை யூட்டும் ஒரு செய்தியாகும். இவர் சிறு பாயத்தில் ஆனந்தக் கல்லூரியிற் கல்வி பயின்றார். தீவிர விவேகம் படைத்த இப் பெரியார் அரசாங்க உதவிப் பணம் பெற்று இங்கிலாந்திலும் சில காலம் பயின்றுள்ளார். இலங்கையின் பிரதம நீதியரசராக இலங்கை மகன் ஒருவர் விளங்குவது சுதந்திரம் [illegible] இலங்கைக்கு ஒரு [illegible] மாகும்.

### பிரதம தேசாதிபதி

1949-ம் ஆண்டு பெப்பிரவரி மாதத்துடன் இலங்கைப் பிரதமதேசாதிபதியின் உத்தியோகக் காலஎல்லை முடிவடைகின்றது. ஆனல் மீண்டும் இருவருடகாலம் இவர் அப் பதவியை வகிப்பார் எனவும், காலஎல்லை நீடிக்கப்படுமெனவும் அறியக் கிடக்கின்றது. இதற்கிடையில் பிரதம தேசாதிபதியான சேர் ஹென்றிமூர் 'லீவு' எடுத்துக்கொண்டு ஊர் செல்லவுங்கூடும். அக் காலத்தில் அப்பதவியைத் தற்காலிகமாகப் பிரதமநீதியரசரான ஸ்ரீ விஜயவர்த்தன வகிப்பார் எனநிச்சயமாகக்கூறிவிடலாம்.

### பிரதமர் வருத்தம்

பிரதமர் சேனநாயகா அவர்களுக்குக் காலிலே ஏதோ வருத்தம் ஏற்பட்டிருக்கின்றதெனப் பேசப்படுகின்றது. இது காரணமாக அவர் எவ்வித அரசாங்க அலுவல்களிலும் அதிகம் ஈடுபடுவதில்லை.

அவுஸ்திரேலியாவுக்குவிமானப் போக்குவரத்துச் சம்பந்தமாகப் பறந்து சென்ற போக்குவரத்து மந்திரி சேர் யோன் கொத்தலாவல சரியான தலையிடி காய்ச்சலுடன் ஊர் திரும்பிய சங்கதி வாசகர்கள் அறிந்ததொன்று. இப்போது அவர் பூரண குணமடைந்துவிட்டார். வைத்தியசாலையினின்றும் விலகி இப்போது வீட்டிலே இருக்கின்றார்.

[illegible]

[illegible]றோல் கட்டுப்பாடு மீண்டும்

# கொழும்பு—நிருபர் கடிதம்



தலைகாட்டுமென அரசாங்கம் பத்திரிகைகளில் அறிவித்ததுமன்றி, அதற்கான ஒழுங்குகளையும் செய்து வருவதாகவும் செய்திகள் கூறின. சமீபத்தில் பெற்றோல் கப்பல் ஒன்று இலங்கையை வந்தடைய விருப்பதால் பெற்றோல் விஷயத்தில் அரசாங்கம் தாராளமனப் பான்மையுடன் நடந்து கொள்ளுமென அறிகின்றேன்.

### ஸ்ரீ ஏ. மகாதேவா

சில மாதங்களுக்கு முன்னர் வகுப்புவாத அரசியற் சூறாவளி, யாழ்ப்பாணத்தை அல்லோலகல்லோலப் படுத்தியபோது ஸ்ரீ ஏ. மகாதேவா அவர்கள் எதற்கும் அசையாமல் தனது கொள்கையைப் பிரசாரம் செய்து வந்தார். ஸ்ரீ மகாதேவா தோல்வியுற்ற போதிலும் அவருடைய அரசியற் கொள்கை அதிக சக்தியடைந்து வருகின்றது. ஸ்ரீ யூ. என். பி. யை எதிர்த்து நின்ற ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களே இன்று பெரிய யூ. என். பி. தூண்களில் ஒன்ருக விளங்குகின்றார்!!

தோல்வியுற்ற, ஸ்ரீ மகாதேவா அவர்களுக்குப் புது வருடத்துடன் 'சேர்' பட்டம் கிடைக்குமெனவும், அவர் இலங்கையின் பிரதிநிதியாக இந்தியாவுக்குச் செல்லக்கூடுமெனவும், லண்டன் நிருபர் ஒருவர் இங்குள்ள பத்திரிகை ஒன்றுக்கு எழுதியுள்ளார். அத்துடன் பிரதிநிதிகள் சபைத்தலைவர் மொலமுரே அவர்களுக்கும் 'சேர்' பட்டம் வழங்கப்படுமென அறிகின்றேன். இத்தகைய சோதிடங்கள் சில சமயங்களிற் பலியாது விடுவதுமுண்டு.

### தந்திக் கட்டணம்

தபாற் கட்டணத்தில் ஜனவரி 24-ந் திகதியுடன் சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதனற் பொதுமக்கள் இலாபமுமடையலாம் ஓரளவுக்கு நட்டமும் அடையலாம். அரசாங்கம் இது விஷயத்தில் தந்திரமாக நடந்திருக்கின்றது. நிற்க, தந்திக் கட்டணத்தை உயர்த்துவது பற்றியும் அரசாங்கம் யோசனை செய்து வருகின்றதென அறியக் கிடக்கின்றது.

### வேடுவர் பாடல்

கொலைக்குற்ற வாளியாகத் தலைமறைவிலே திரிந்த வன்னக்கு திசஹாமி இன்று அரசாங்க அதிதியாகும் பாக்கியத்தைப் பெற்றுள்ளார். அவர் வேடுவர்களின் பாடல்களை அப்பழுக்கற்ற முறையிற் பாடுவாரெனத் தெரிகின்றது. ஆகவே அப்பாடல்கள் சிலவற்றை அரசாங்கம் ஒலிப்பதிவு செய்துள்ளது. திசஹாமி மறைந்தாலும் அவருடைய 'குரல்' நிலவத்தான போகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அன்னை சாரதாதேவி

ஸ்ரீ இராமகிருஷ்ணபரமஹம்சர் கண்ட ஸ்ரீ சாரதாமணி தேவியாரின் ஜெயந்தி விழா சமீபத்திற் கொண்டாடப் பட்டது. இராமகிருஷ்ண சங்கத்தின் சக்தியெனத் திகழும் தேவியாரின் உயர்வைப் பற்றி இக் கட்டுரை விளக்குகின்றது. — ப. ர்.

எல்லோரும் சிரித்தனர். அக்காட்சியைப் பார்த்துச் சிரிக்காமலிருக்க முடியவில்லை. அப்பொழுது சாரதாவுக்கு வயது ஏழுதானிருக்கும். அவளுடைய கணவன் கதாதரர் (இராமகிருஷ்ணர்) மாமன் வீட்டுக்கு வந்திருந்தார். அவள் இளம்பராயமாய் இருந்தபடியாற் கணவனை எவ்வாறு உபசரிக்க வேண்டுமென்பதை ஒருவரும் அவளுக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை. அப்படியிருந்தும் அவள் தன்னால் தூக்கமுடியாத பெரிய பாத்திரமொன்றிலே தண்ணீர் கொண்டுவந்து கணவனின் பாதங்களைத் தன் சிறிய கரங்களினாற் கழுவினாள். அதன் பின்னர் விசிறியால் விசிறினாள். தனது விளையாட்டுத் தோழனாகிய பூனைக்குட்டிக்குத் தானும் இச் செயல் விந்தையாகவே இருந்தது. சாரதாவைப் பார்த்தால் சாதாரணமான பெண்தான். ஆனால் அவள் நூதனமான சிருஷ்டியாகவே இருந்தாள். அவளுடைய தந்தையார் அவள் அன்னை பராசக்தியே உலகலீலைக்காக இம் மண்ணுலகத்தில் தோன்றினாளெனக் கருதி வணங்கிவருவார். ஒருமுறை நாட்டிலே ஒருபெரிய பஞ்சம் வந்தது. வங்கநாட்டிலே பஞ்சம் வருவது சர்வசாதாரணம். அப்பொழுது ஏழைகளும் பசிப்பிணியாளர்களும் சாரதாவின் வீட்டுக்குக் கும்பல் கும்பலாய் வருவது வழக்கம். தந்தையாராகிய இராமச்சந்திரர் அரிசியும் பருப்பும் சேர்த்துப் பொங்கல் செய்வார். அங்கு வருபவர்களனைவருக்கும் வீட்டிலுள்ளவர்களுக்கும் அதையே உண்ணக் கொடுப்பார். ஆனால் சாரதாவுக்கு மட்டும் வேறு ஏற்பாடு செய்வார். சாதாரணமான உணவை அவளுக்குக் கொடுக்க அவருக்கு மனம் வராது. தாயார் சியாமளசுந்தரி மகளின் முகத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டு "அம்மா நீ யார்? எனக்கும் உனக்குமிடையேயுள்ள தொடர்புதானென்ன? நான் உன்னை யார் என்று அறியமுடியவில்லையே? எனது மறு பிறவியிலும் உன்னை எனது மகளாகப்பெற இறைவன் திரு அருள் புரியவேண்டும்" என்று கூறுவாள். மகள் "ஏன் இனிமேலும் என்னை இங்கு இழுக்கிறாய்" என்று பதிலளிப்பாள். இதெல்லாம் நடந்தபோது சாரதாவுக்கு வயது ஐந்து.

சாரதா ஒரு நல்ல பிள்ளை. இடுப்பளவு தண்ணீரில் நின்றுகொண்டு மாடுகளுக்குப் புல் அறுப்பாள். வயலில் வேலை செய்பவர்களுக்கு உணவு கொண்டுபோய்க் கொடுப்பாள். பட்சிகள் விளைவை அழிக்கும்போது நிலத்திலே சிதறிக்கிடக்கும் தானியங்களைப் பொறுக்குவாள். இத்தகைய மகள்மீது எப்பெற்றோருக்குத்தான் பிரியமிராது.

ஐந்தாம் பராயத்தில் விவாகம் நடந்தது நூதனமல்ல. அக்காலத்தில் அப்படி நடப்பது சர்வசாதாரணம். மணமகள் எவ்விதம் தேர்ந்தெடுக்கப்பட்டாள் என்பதிற்தான் விநோதம் இருக்கின்றது. கதாதரர் (இராமகிருஷ்ணர்) சித்த சுவாதீனமற்றவரென்பது யாவரும் தெரிந்த விஷயம். அவரின் கடவுள் வேட்கை ஒரு வியாதியென்று பலராலும் கருதப்பட்டது. அந்த வியாதிக்கு விவாகமே சிறந்த ஔடதமென வைத்தியர் கூறிவிட்டார். கதாதரரின் தாயாரும், அண்ணனும் ஒரு பெண்ணைத் தேடுவதில் ஈடுபட்டனர். ஆனால் அந்தக்காலத்து இந்துக்களின் சம்பிரதாயப்படி ஒரு விவாகம் நடத்துவது மிகவும் சுலபமான காரியமல்ல. உலகிலே நடக்கும் விவாகங்களுக்குச் சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் முதலியவற்றின் அநுக்கிரகத்தையும் பெறவேண்டுமென்று கருதப்பட்டது. குலம், கோத்திரம் என்பவற்றைக் கவனித்தாகவேண்டும். தாயார் சந்திரமணியும், தமையன் ராமேசஸ்வரரும் செய்வது யாதென்று தெரியாமல் இளைத்தனர். ஏனெனில் கதாதரர் (இராமகிருஷ்ணர்) அறியாதபடி இரகசியமாகவே இதைச் செய்து முடிக்கவேண்டுமென்று அவர்கள் கருதினர். ஆனால் கதாதரருக்கோ அவர்களின் இரகசிய நடவடிக்கைகளெல்லாம் நன்கு தெரிந்திருந்தது. அவர்களுடைய முயற்சியெல்லாம் பயனற்றுப்போனது கண்டு கதாதரர் அவர்களுக்கு உதவி கொடுத்தார். ஒருநாள் ஆழ்ந்த சிந்தனையிலிருக்கும்போது "அங்கும் இங்கும் தேடி அலைவதில் பயனில்லை. ஜெயராம்பட்டி என்னும் கிராமத்துக்குப் போங்கள். அங்கு இராமசந்திரமுக்கர்ஜியின் வீட்டில் ஒரு பெண் தெய்வீகமாக வைக்கப் பட்டிருக்கின்றது" என்று கூறினார். அவர்கள் அப்படியே இருக்கக்கண்டார்கள். இன்னும் ஒரு சிறு சம்பவம் இதற்குமுதல் நடந்தது. கதாதரரின் மாமன் இருதயர் வீட்டில் ஒரு பஜனை நடைபெற்றது. அத்தருணம் அநேக ஆண்களும் பெண்களும் குழுமியிருந்தனர். கதாதரரும் சமூகமாயிருந்தார். பஜனை முடிந்தவுடன் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருக்கும் ஒரு பெண் தன் மடிமேலிருக்கும் குழந்தையைப் பார்த்து "அருமைக் குழந்தாய்! இங்கு குழுமியிருக்கும் ஆடவர்களுள் நீ யாரை மணஞ்செய்ய விரும்புவாய்" எனக்கேட்டாள். அச் சிறு குழந்தையானது இரு கரங்களாலும் கதாதரனையே சுட்டிக் காட்டியதாம். அக் குழந்தைதான் இரண்டு வயதுப் பெண் சாரதாமணி.

சாரதா முதன்முறையாகக் கணவன் வீட்டுக்குப் போன காலம் பேரிச்சம்பழக் காலம். ஐந்து வயதுச் சாரதா அயல்வீட்டுக் குழந்தைகளுடன் சேர்ந்து பழங்களைப் பறித்து உண்டு களித்தாள். மாமியார் கொடுத்த அணிகலன்களை அணிந்து பெருமை அடைந்தாள். ஆனால் அணிகலன்களோ அயல் [illegible] பணக்காரியின் பொ[illegible]

சுவாமி நடராஜானந்தா

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

சிறந்தபலனுக்கு
C. C. C. புகையிலைப்பசளை
கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனியார்

இரண்டு விதமான வெவ்வேறு கலவைகள் எங்களால் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படுகின்றன. ஒன்று சப்புகிற புகையிலைக்கு வேண்டிய மாதிரியிற் பிரத்தியேகமாகக் கலவை செய்யப்படுகிறது. மற்றது சுருட்டுப் புகையிலை அல்லது குடி புகையிலைக்கு வேண்டிய மாதிரியில். இவ்விரு கலவைகளும் தோற்றத்தில் அதிக வித்தியாசமுடையவை. கமக்காரர்கள் தங்கள் தேவைக்கு எழுதும்போது தாங்கள் பசளையிடப்போகும் புகையிலை (மேலேகாட்டிய) எந்த வகையைச் சேர்ந்ததென விபரமாகக் கூறவேண்டும்

C. C. C.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி
லிமிற்றெட்

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது]

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்.

The
Colombo
Commercial
Company
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

(3577)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞரின் கருத்துக்கள்

புதுப்புது மாறுதல்களுக்குத் தக்கபடி ஒரு புதுச் சமுதாயத்தையும் பொருளாதார அமைப்பையும் உண்டாக்க வேண்டியது மிகவும் அவசியம். ஜாதி, மத வித்தியாசங்களாலுண்டான தீமைகளை ஒழித்த ஒரு சமுதாயம் அமையவேண்டும் என்பதைவிடப் பொருளாதார வித்தியாசங்களாலிருக்கிற தீமைகளைத் தீர்க்கக்கூடிய ஒரு புதுச் சமுதாயம் அமையவேண்டும் என்பதே அவசரமான அவசியம்.

* * *

வேதாந்த சித்தாந்த விஷயங்களை இக்காலத்தில் வேலையற்றவர்கள்தான் விரும்பக்கூடும். அப்படி வெறும் வேதாந்த சித்தாந்த விஷயங்களில் பொழுதைச் செலவிடுகின்றவர்களைச் சமுதாயம் விரும்புவதில்லை. இது யாருடைய குற்றமும் அல்ல. காலப் போக்கின் கட்டாயம்.

* * *

பழைமையின் தொடர்ச்சியே புதுமை என்ற நம்பிக்கை வேண்டும்! அந்த நம்பிக்கையோடு பழைய இலக்கியங்களைப் பார்த்தால் அவற்றைப் பழிக்கவேண்டிய பழியைச் செய்ய மனம் இடந்தாராது.

* * *

இங்கிலாந்தின் ஜனநாயக சபையான 'பார்லிமென்ட்' என்ற பெயர் தமிழ்ச்சொல் என்று சொல்லலாம் என்று ஒருவர் சொன்னார். எப்படி என்றால் 'பார்லிமெண்டு' என்னும் பதம் 'பாரளி மன்று' என்பதின் மருவாம். பார்—உலகத்தை அல்லது நாட்டை அளி—காக்கின்ற, மன்று—சபை. பார்லிமென்ட் ரொம்பவும் பொருத்தமாகத்தான் இருக்கிறது. ஒன்றும் தெரியாதவர்கள் ஒப்புக்கொள்ளலாம். ஆனால் தமிழிலிருந்தா 'பார்லிமென்ட்' என்ற பதம் வந்திருக்க முடியும்? இப்படி வார்த்தைகளைப் பிடித்துக்கொண்டு வாதாடுவதெல்லாம் அறிவுக்கும் அழகல்ல, உண்மைக்கும் ஒத்ததல்ல.

## இளம்பருவம்

இன்பம் நிறைந்த இளமைப் பருவத்தின் சிறப்பை என்னென்று சொல்ல முடியும்? வித்தையின் வித்துக்கள் வேரூன்றும் பருவம். வாழ்க்கையின் லட்சியம் வளருகின்ற பருவம். அறிவின் மொட்டுகள் அரும்பும் காலம். மனம் என்னும் புஷ்பம் மலருகின்ற தருணம். அன்பும் ஆர்வமும் அலைபுரளும் சமயம். புதுப் புதுத் துடிப்புகள் போராடும் நேரம். தாராள எண்ணங்கள் தலைதூக்கும் தருணம். கஞ்சத்தனங்கள் கலக்காத காலம். ஒவ்வொரு குணமும் உருக்கொள்ளும் பருவம்.

'அதிர்ஷ்டம்' 'துரதிருஷ்டம்' என்று நாம் எதை எப்படி நினைத்துக்கொண்டாலும், நம்முடைய எண்ணங்களையும் அளத்தல், நிறுத்தல், கூட்டல், கழித்தல்களையும் கடந்து நிற்கின்ற தெய்வசித்தந்தான் நடக்கும். அந்தச் சித்தத்திலிருந்துதான் நம் சக்திகள் அனைத்தும். இந்த நம்பிக்கை ஒன்றுதான் நம்மைக் காக்கும். ஆனால் அந்த நம்பிக்கை வெறும் பூஜைகளாலோ அல்லது கோயில் குளங்களுக்குச் செய்துவிடும் தானங்களாலோ மட்டும்வந்துவிடக்கூடியதல்ல

## புலவர் வறுமை

புலமைக்கும் வறுமைக்கும் என்னதான் பொருத்தம் இருக்கிறதோ, பணத்துக்கும் புலமைக்கும் என்ன பகைமைதான் இருக்கிறதோ, தெரியவில்லை. 'பொருள்தனைப் போற்றி வாழ்'த் தெரியாததனாலோ, அல்லது செல்வத்தை அடிக்கடி அவமதித்துக் கவி பாடுவதால் செல்வ தேவதையின் சினத்துக்கு ஆளாகி விட்டதனாலோ, அல்லது எந்நேரமும் கற்பனையான மனக் கோட்டைகளிலேயே இருந்துகொண்டு காரிய முயற்சிகளில் ஈடுபடாமல் உலக விவகார ஞானத்தை உல்லங்கனம் செய்துவிடுவதனாலோ, மற்றும் என்ன காரணத்தினாலோ, 'புலவன்' என்ற பெயர் பெற்றவர்களிற் பெரும்பாலோர் வறியவர்களாகவே வாழ்ந்திருப்பதாகத் தெரிகின்றது. வள்ளல்களும் மன்னர்களும் அமோகமாக ஆதரித்தும் கூடப் பலபுலவர்களை வறுமை விடவே இல்லை.

## அனுபவம்

நான் புதுமைக்கென்று எதையும் மாற்றிவிட விரும்பும் புரட்சிக்காரனும் அல்ல; பழமையானது என்பதற்காக மட்டும் எதையும் மாற்றிவிட விரும்பாத வரட்சிக்காரனும் அல்ல. எந்த ஆராய்ச்சிக்கும் சுருதி, யுக்தி, அனுபவம் என்ற மூன்றும் அவசியம். 'சுருதி' என்பது ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றி நமக்கு முன்னால் ஆராய்ந்த அறிஞர்கள் எழுதிவைத்துப் போயிருக்கும் முடிபு. 'யுக்தி' என்பது நம்முடைய சொந்த அறிவு. 'அனுபவம்' என்பது உலகத்தில் தினப்படி வாழ்க்கையில் நாம் காணும் உண்மைகள்.

## இராமாயணம்

கம்பராமாயணம் ஒரு சர்வகலாசாலை. அதில் காணப்படாத கலை அரிது. அநேக ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழன் பல கலைகளிலும் கைதேர்ந்தவன் என்பது சரித்திர பூர்வமான சத்தியம். தமிழ் மக்களின் அந்தக் கலைப்பண்பு கம்பன் காவியத்தில் உச்சம் பெற்றிருப்பது மறுக்க முடியாத உண்மை.

* * *

தமிழ்ப்பத்திரிகைகளுக்குள்ளேயே சில பத்திரிகைகள் தமிழிசை இயக்கத்தை ஆதரித்தும், சில பத்திரிகைகள் கண்டித்தும் எழுதலாயின. தமிழ்நாட்டில் பாட்டுக்கச்சேரிகளில் பாடப்படும் பாட்டுகள் தமிழில் இருக்கவேண்டுமா இல்லையா என்பதைப் பற்றி, தெலுங்கு பத்திரிகைகளும், கன்னட பத்திரிகைகளும்—ஏன் இங்கிலீஷ் பத்திரிகைகளும் கூட—விவாதிக்க ஆரம்பித்து விட்டன. இதுதான் சமயம் என்று அரசியல் கட்சி மனஸ்தாபங்களும் இதில் புகுந்து கலந்துகொண்டன. ஜாதிச் சண்டைகள், வடமொழி தென்மொழிச் சண்டை, ஆரிய—திராவிடச் சண்டை முதலானவைகளும் அங்கங்கே இந்தக் குழப்பத்தில் பங்கு கொண்டன.

> நாமக்கல் கவிஞரின் எண்ணக் குவியல்களி லிருந்து கொய்த மலர்கள், கவிஞர் களஞ்சியம்* என்ற பெயருடன் நூல் வடிவத்திலே தமிழ்ப்பண்ணைப் பிரசுரமாக வெளியாகி யுள்ளது. அவற்றுட் சிலவற்றை இங்கு காண்க. ப—ர்.

## கர்நாடக சங்கீதம்

கர்நாடக சங்கீதம் என்ற பயிர் இந்தத் தமிழ் மண்ணிலேதான் வளர முடிந்தது. வேறு எந்த நாட்டிலும் இதற்கு வேண்டிய பூமி சத்தும், எருவும், நீரும் இருக்கவில்லை. அந்தப் பூமி சத்தும், எருவும், நீருமாக உதவினது எது வென்றால், தமிழ் நாட்டில் சங்ககாலத்திலிருந்து பாண்டிய சேர சோழ மன்னர்களாற் பாதுகாக்கப்பட்டு, தமிழ் நாட்டுக் கோயில்களில் தெய்வத்துடன் சேர்த்துக் கும்பிடப்பட்டு, நாட்டியக்காரரின் பாட்டிலும், மேளக்காரரின் வீட்டிலும் குலதெய்வமாகக் கொண்டாடப்பட்டு, தேவார, திருவாசக, திருமொழிப் பாசுரங்களில் பண்பெற்று 'என்றுமுளதென் தமிழில்' இருந்துகொண்டே இருந்த இசைக் கலைதான். இளங்கோவடிகளின் இலக்கியத்திலும் அடியார்க்கு நல்லாரின் உரையிலும் சொல்லப்பட்ட அதே இசைக்கலைதான் காலத்துக்கேற்ற மாறுதல்களை அடைந்து, புதுப் புதுக் கலைவாணர்களுடைய மனோ தர்மங்கள் கலந்து, 'கர்நாடக' சங்கீதமாக இப்போது காதில் விழுகின்றது.

## புதுமை

புதுப்புது எண்ணம் வேண்டும். வாழ்க்கையிற் புதுமை வேண்டும். மதிப்புடன் நம்மைக் கண்டு மற்ற நாட்டவர்களெல்லாம் துதிப்புடன் தொடர, எல்லாத் துறையிலும் புதுமைதோன்ற 'விதிப்பயன்' என்ற பேச்சை விட்டிட வேண்டும்.

* * *

தமிழைப் போற்றுதல் தமிழரின் கடமை. தமிழின் வளர்ச்சியை மனதில் தரித்து, அன்னியர் அறிவையும் தமிழில் ஆக்கி, அவசியமானால் அருவருப்பின்றிப்பிறமொழிப் பதங்களைத் தமிழில்சேர்த்து, தொழில்முறை அறிவுகள் தமிழில் தொடுத்து, ஏனைய நாட்டின் எல்லா அறிவும் தமிழில் உண்டு எனப் பெருமைப்படும்படி செய்துவைப்பதே தமிழ்மொழிச் சேவை.

* * *

கவிதை என்பது கற்பனை உள்ளது. கூட்டியும் பேசும் குறைத்தும் கூறும். பொய்மையும் வாய்மையேபோலப் பொலிவுற அறங்களைப் புகட்டுவதே அதனுடைய நோக்கம்.

*சக்தி* *கவிஞர் களஞ்சியம்: பிரசுரம் தமிழ்ப்பண்ணை, சென்னை. விலை அணா 12.

## புது யுகம் பூத்தது*

[சுரபி]

புத்தம் புதியயுகம் வந்ததேயடா — எங்கும்
பொன்னுலக மாமலர்கள் சிந்துதேயடா
இத்தரையில் புத்தன்முதல் சித்தர்களெல்லாம்—கண்ட
இன்பக் கனவுநன வாகுதேயடா

தீராத நள்ளிரவு தீர்ந்ததேயடா — இளஞ்
செங்கதிரின் சோதியெங்கும் சூழ்ந்ததேயடா
வாராத நாளுமின்று வந்ததேயடா — இந்த
வையகத்தர் உய்யுங்காலம் வந்ததேயடா

அன்னையவள் புண்களெல்லாம் ஆறுதேயடா—எங்கும்
அன்பர்கரம் சென்னியிலே ஏறுதேயடா
மின்னலெனக் காரிருளில் வந்தபுனிதன் — ஞான
விழிகளிலா னந்தவெள்ளம் ஊறுதேயடா

அன்பாலே அணுவதனை வெல்லுவோமடா—பொல்லா
ஆயுதத்தின் ஆட்சியினைக் கொல்லுவோமடா
என்பாலே வெம்படைகள் விட்டியவனை—உலகுக்
கீன்றளித்த நாடிதெனச் சொல்லுவோமடா

அன்னையவள் சென்னியிலே ஒண்முடிசூட்டி—எங்கும்
ஆடிட மணிக்கொடியை விண்முடிநாட்டி
மன்னுலக மத்தனைக்கும் உய்வழிகாட்டி—என்றும்
மங்காத ஆசியத்தின் ஜோதிவளர்ப்போம்.

* சக்தி காரியாலயத்தாரின் வெளியீட்டிலிருந்து அநுமதிக்கப்பட்டது.

# பிரிட்டன் பொதுஉறவு மகாநாடு

ஏ. எஸ். நடராஜா

இரண்டாவது உலகமகா யுத்தம் ஒழிந்து இரண்டு வருடங்கள் கடந்துவிட்டன. ஆயின் அதனாலேற்பட்ட நட்டத்தை எந்த நாடாவது இன்னும் ஈடுசெய்யவில்லை — ஈடு செய்ய முடியவில்லை. இதற்கிடையில் மூன்றாவது யுத்தத்திற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன; ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. இந்நேரத்தில் பிரிட்டன் தன் உறவு நாடுகளைக் கூட்டி ஆலோசனை நடாத்தியது. இரண்டாவது மகா யுத்தத்துக்கு முன்பும் இவ்வாறு கூடினார்கள். அன்று இந்தியாவும் இலங்கையும் சுதந்திரமில்லாதிருந்தன. அதனால் பொது உறவு மகாநாட்டில் அங்கத்துவம் வகிக்கும் அருகதையும் அவைகளுக்கிருக்கவில்லை. அடிமை நாடுகளைத்தான் ஏன் கலந்தாலோசிக்க வேண்டும். "கோழியைக்கேட்டு ஆணம் சமைப்பாருமுண்டா?" தங்கள் இஷ்டப்படியே இரு நாடுகளையும் யுத்தத்தில் இழுத்து விட்டனர். இன்று நிலைமை வேறு. இரு நாடுகளும் தாம் இழந்த சுதந்திரத்தை அடைந்துவிட்டன; அதாவது, டொமினியன் அந்தஸ்து என்று சொல்லப்படும் ஒரு சுய ஆட்சியை நிலையாகப் பெற்றுவிட்டன. முன்னர் **இந்தியா** என விளங்கியதேசம் இன்று 'இந்தியா' என்றும் 'பாகிஸ்தான்' என்றும் இரு டொமினியன்களாகப் பிரிக்கப் பட்டாயிற்று. எனவே, இன்று பிரித்தானிய பொது உறவு மகாநாட்டில் மூன்று புதிய நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. கனடா, அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, நியூசிலந்து, சுதந்திர அயர்லாந்து இவைகளே இம் மகாநாட்டில் முன்னர் அங்கத்துவம் வகித்தன. ஒருகால் பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் பகுதிகளாயிருந்த நாடுகள்—பிரித்தானிய அரசனாலும் பாராளுமன்றத்தாலும் ஆளப்பட்ட நாடுகள் இன்று டொமினியன்களாய்—பிரிட்டனுடன் சம அந்தஸ்து உடையவைகளாய் மாறிவிட்டன. இவை எவ்வாறு பிரிட்டனின் ஆளுகையின்கீழ் வந்தனவென்றும் குடியேற்றநாட்டந்தஸ்திலிருந்துடொமியன்களாகஎவ்வாறு வளர்ந்தன என்றும் அவற்றின் இன்றைய நிலையென்னவென்றும் ஆராய்தல் பலனுடைத்து.

## அரசர் ஆசை

உலகில் பண்டைநாள் தொட்டு பல சக்கிராதிபத்தியத்தைச்சார்ந்தவர்கள்—அசீரியர், பாபிலோனியர், கிரேக்கர், உரோமர், சீனர், இந்தியர் முதலிய பல தேசத்தவர்களும் வல்லரசுகளை ஸ்தாபித்து அந்நிய நாடுகளை ஆக்கிரமித்துச் செல்வமும் புகழும் ஈட்டினார்கள். இவை பெரும்பாலும் ஆளுகையில் மோகங்கொண்ட வல்லமை மிக்க அரசர்களாலேயே விளைந்தன. மனிதனின் ஆசைக்களவில்லை. அரசனும் மனிதனே. ஒரு சிறு பிரதேசத்தை ஆளும் அரசன் அதனுடன் திருப்தியடைவதில்லை. படையைப் பெருக்கிப் பலப்படுத்திக் கொண்டு வேற்றரசர்களை வென்று அவர்களுடைய நாட்டைக் கைப்பற்றத் தெண்டிக்கின்றான். இந்த முயற்சிதான் சக்கராதிபத்தியங்கள் தோன்றுவதற்கும் அழிவதற்கும் காரணம். கடல்கடந்து சென்று யுத்தஞ்செய்து நாட்டைக் கைப்பற்றிய அரசர்கள் பலரை நாம் அறிவோம். யூலியசீசர், மகா அலெக்சாந்தர், நெப்போலியன் போன்ற அரசர்கள் இதற்குத் தகுந்த உதாரணமாயிருக்கிறார்கள்.

கௌடில்யன் தான் வடமொழியில் எழுதிய அரசியல் நூலாகிய அர்த்தசாஸ்திரத்தில் "ஒரு அரசன் எந்தவழியினாலும் அதிகாரத்தைப் பெறவேண்டும். யுத்தம், சமாதானம், நடுநிலை, ஏமாற்றக்கூடிய ஒப்பந்தங்கள், சிநேகம் இவற்றுள் எதையாவது அநுஷ்டித்து அந்நியநாட்டை ஆக்கிரமிக்கலாம். அதன் பலனை அநுபவிக்கும் உரிமையும் அவனுடையது" என்று கூறுகிறான். இதே கருத்தை இத்தாலிய நூலாசிரியனாகிய மாக்கியவெலி தான் எழுதிய 'அரசகுமாரன்' என்னும் நூலில் குறிப்பிட்டிருக்கின்றான்.

## வர்த்தகம்

பிரித்தானிய சக்கராதிபத்தியம் வளர்ந்தவிதம் வேறு.

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளங்கா விளக்கம்

இளங்கோவடிகளும் கண்ணகியும் என்னும் தலைப் பெயரையுடைய கட்டுரையுள், பண்டிதர் சி. நாகலிங்கம் என்பவர், சான்றோர் புலனெறி வழக்கமென்பது சங்கச் சான்றோர் செய்யுட்களையே குறிக்குமென்றும், அது சிலப்பதிகாரத்தைக் குறிக்காது என்றும் நச்சினார்க்கினியர் கூறுவதாகப் பொருள்பட, திரு. கணேசையர் கூறுவதையும் நாம் உடன்படவில்லை: .........நச்சினார்க்கினியர் அகப்பொருள்பற்றி வந்த சுட்டியொருவர் பெயர் கொள்ளாத பாக்களை ஆராய்ந்தவராக கணேசையர் சிலப்பதிகாரத்தைத் தொட்டது எங்கள் தவக்குறைவே என்று எழுதியுள்ளார்.

ஐயரவர்கள்; தொல். பொருள். அகத்திணையியலுள் வரும் "முந்நீர் வழக்கம் மகடூஉவோடில்லை" என்னும் நூசம் சூத்திர உரையுள், இனி இச்சூத்திரத்திற்கு "பொருள்வயிற் பிரிவின்கட் கலத்திற் பிரிவு தலைவியுடன் சேரவில்லை எனவே காலிற் பிரிவு தலைவியுடன் சேறலுண்டு எனப் பொருள் கூறுவார்க்குச் சான்றோர் செய்த புலனெறி வழக்கம் இன்மை உணர்க" என்ற வாக்கியத்திற்குக் குறிப்பெழுதுங்கால், கலத்திற் பிரிவு என்பதன்முன் இலக்கம் 1. இட்டு, இவ்வாறு பொருள் கூறுவார் இளம் பூரணர் என்ற கீழ்க் குறிப்பும, சான்றோர் என்பதன் முன் இலக்கம் 2 இட்டு, சிலப்பதிகாரக்கதையுள் இவ்வாறு வருகின்றது. சான்றோர் என இவர் கருதுவது சங்கப்புலவரை என்றும் எழுதி அச்சிட்டுள்ளார்கள். சிலப்பதிகாரக் கதையுள் இவ்வாறு வருகின்றது. ஆதலின் சான்றோர் என இவர் கருதியது சங்கப்புலவரையே எனச் சங்கப் புலவர் என்பதைத் தெரித்தற்காகவே ஐயரவர்கள் அதனை எடுத்தாண்டார்களன்றி வேறொன்றுபற்றி எடுத்தாண்டாரல்லர். அங்ஙனமாக ஐயரவர்கள் சிலப்பதிகாரத்தைத் தொட்டது தவக்குறைவேயாகும் எனப் பண்டிதர் கூறியது விளங்காமையானேயாகும். சிலப்பதிகாரத்துள் தலைவியுடன் சேறலாகிய காலிற் பிரிவு வருகின்றதே அவ்வாறு வரவும் நச்சினார்க்கினியர் அக்காலிற் பிரிவை மறுத்ததென்னையோ எனச் சிலர் ஐயப்படுவார் என்பது கருதியே அவ்வையத்தை நீக்குதற்கு ஐயரவர்கள் அதனை எடுத்துக் கூறினர். ஆதலின் அதுவும் எங்கள் தவநிறைவே என்பதைப் பண்டிதர் அறிந்து கொள்வாராக. ஆதலின் என்பது அச்சிற்றவறு. ஆயினும் சங்கப்புலவரை எனவே அது குறிப்பால் விளங்கக்கிடக்கின்றது.

இனி, நச்சினார்க்கினியர், சங்கப்புலவரையே கருதினரென்பது "முந்நீர் வழக்கம் மகடூஉவோடில்லை" என முற்கூறிய சூத்திரவுரையுள் வரும் விசேடவுரைகளான் நன்கு துணியப்படுதல் காண்க. இன்னும் பேராசிரியரும், தொல்-பொருள், மரபியல் 94-ஞ் சூத்திரவுரையுள், "பாட்டுந் தொகையுமல்லாதன சிலநாட்டிக்கொண்டு மற்றவையுஞ் சான்றோர் செய்யுளாயின் வழுவில் வழக்காமென்பாருளராயின் இக்காலத்துள்ளும் ஒரு சாரார்க்கல்லது அவர் சான்றோரெனப்படாரென்பதூஉம்" என்று கூறுவதினுலும சான்றோர் என மதிக்கப்படுவார் சஙகச் சான்றோரே என்பதையும் பண்டிதர் நன்கு அறிந்து கொள்வாராக.

இனி நச்சினார்க்கினியர் சுட்டியொருவர் பெயர் கொள்ளாத பாக்களை ஆராய்ந்தாராக கணேசையர் சிலப்பதிகாரததைத் தொட்டது எங்கள் தவக்குறைவே எனப் பண்டிதர் இரங்குவதும் அவரது விளக்கக் குறைவே.

அச் சிலப்பதிகாரத்து சுட்டியொருவர் பெயர்கொண்டு வரும் ஐந்திணையாகிய கந்தருவ மணம் வருவதினுலும், தலைவியுடன் சேறலாகிய காலிற்பிரிவு வருவதினுலும் அதனையுஞ் சான்றோர் புலனெறி வழக்காகிய ஐந்திணையே என்று மயங்குவரொன்று கருதியே, ஐயரவர்கள் சிலப்பதிகாரத்துக் காலிற்பிரிவு வரினும் அஃது சங்கச் சான்றோர் புலனெறி வழக்காகிய காந்தருவமன்று எனத் தெரித்தற்கே; சான்றோர் என நச்சினார் கூறியது சங்கச் சான்றோரையெனத் தெரித்துக் கூறினார்கள் என்க. அங்ஙனந் தெரித்துக் கூறவே, சுட்டியொருவர் பெயர் கொள்ளாத ஐந்திணையை நச்சினார்க்கினியர் ஆராய்ந்தார் என்பதும் ஐயரவர்கள் கருத்தென்பது அறியப்படுதலின், பண்டிதரவர்கள் ஐயரவர்கட்குத் தெரியாததுபோல, அவர்கள் சிலப்பதிகாரத்தைத் தொட்டது எங்கள் தவக்குறைவே என்று கூறியது பயனில்கூற்றேயாமென்க.

சுட்டியொருவர் பெயர்கொண்டு வரும் ஐந்திணையாகிய காந்தருவமும் உளவெனவும், அது தொன்மையும் தோலுமாகிய வனப்பினுள் வருமெனவும், அது உலகியலாகிய நிலத்தொடு புணர்ந்த மணமெனவும், அதுவும் பாடப்படும் எனவும் நச்சினார்க்கினியர் கூறுவதை,

"பாங்க னிமித்தம்
பன்னிரண் டென்ப"
"நிலத்தொடு புணர்ந்த
யாழோர் மேன
தவலருஞ் சிறப்பி
னைந்நிலம் பெறுமே"

என்னுஞ் சூத்திரங்களின் உரையுட் காண்க. காணவே சிலப்பதிகாரமும் 'தொன்மை' என்னுஞ் செய்யுளுளொன்றாக நச்சினார்க்கினியர் கூறலின் அது சங்கச் சான்றோர் புலனெறி வழக்கன்று என்பதும், சங்கச் சான்றோர் புலனெறி வழக்கையே சான்றோர் புலனெறி வழக்கென்று நச்சினார்க்கினியர் கூறினர் என்பதும் நன்கு புலப்படுதல் காணப்படுமென்க.

இங்ஙனங் காணப்படவே, பண்டிதர் சான்றோர் என்றது சங்கச் சான்றோரையே குறிக்கும் என்றும் சிலப்பதிகாரத்தைக் குறிக்காது என்றும் ஐயரவர்கள் கூறியதை யான் உடன்படவில்லை என்று கூறியதும் விளங்கா விளக்கமே. பண்டிதருக்குக் குறிக்குமென்பது கருத்துப்போலும். அன்றேல் உடன்படவில்லை என்று கூறார் என்க.

இனி, இவ்வாறே முன் வேந்தனாரவர்களும் விளங்கா விளக்கமாக ஐயரவர்களுக்கு ஒரு மறுப்பெழுதியுள்ளார். அதனையும் இங்கே காட்டுவேம்:-

ஈழகேசரி, தொகுதி எ, பகுதி நு-ல் (5-7-36) எழுதிய உவமை என்னுங் கட்டுரையில், "உவமையும் பொருளு மொத்தல் வேண்டும்" என்னுஞ் சூத்திரத்துக்குப் பேராசிரியருரைத்த உரையின் பொருத்தமின்மை காட்டியவிடத்து, ஒத்தல் வேண்டும் என்பதற்கு ஒத்த குணமுடையவற்றையே எடுத்து உதாரணங் காட்டல் வேண்டுமென்று பொருளுரைத்து, 'ஆமா எதுபோலுமெனின், ஆப்போலும் என அதனேடொத்த குணமுடையவற்றை ஒப்புமை கூறுவதன்றி அதனேடொவ்வாத எருமை கழுதை குதிரை முதலியவற்றை உவமை கூறலாகாது என உதாரணங் காட்ட, அதனை மறுத்து எருமை, கழுதை, குதிரை முதலியவற்றைச் சுட்டி ஒருமகன் ஒப்புமை கூறுவானே? என்று ஒரு வினு நிகழ்த்தியதுமன்றி, இதனை ஆன்றோர் ஒப்புக்கொள்வாரா என்றும் ஒரு வினு நிகழ்த்தி மறுக்கின்றார். இஃது அபவாதம் விதிக்க வந்த சூத்திரமாகக் கொண்டு ஐயரவர்கள் கூறிய கருத்தையறியாதே இவ்வாறு மறுத்தார். திணை பால் முதலிய வழுவமைக்குஞ் சூத்திரங்களுக்கு உரையாசிரியர்கள் "அவன்வந்தது திணைவழு, அவன் வந்தாள் பால்வழு, யான் வந்தான் என்பது இடவழு, நாளை வந்தான் என்பது காலவழு. கருவூர்க்கு வழியாதெனில், பருநூல் பன்னிருதொடி என்பது விடைவழு, யானைச்சாணி என்பது மரபுவழு என்று உதாரணங்கள் காட்டுவதையும், அவ்வாறு கூறுவாருண்டோ என்றும், அவற்றை ஆன்றோர் ஒப்புக்கொள்வரோ என்றும் வேந்தனார் வினவி மறப்பார்போலும். ஐயரவர்கள் ஒன்றுரைக்க ஒன்றாய் விளங்கி இவ்வாறு மறுத்துரைத்தன பலவுள. அன்றியும் தொல்காப்பியச் சூத்திரங்களையும், உரைகளையும் தாமேதோ விளங்கியதுபோல விளங்காதுரைப்பனவும் பலவுள. அவற்றையெல்லாம் உரைக்கின் விரியுமென்றஞ்சி விடுக்கின்றும். அன்றியும் கழிந்தனவற்றை எடுத்துரைப்பதிலும் பயனில்லையாகும். சிற்சில: படாடோபமின்றி, அடங்கியிருந்து தமிழ்ப் பெருந் தொண்டுசெய்து வரும் பெரியோராகிய ஐயரவர்களுக்குக் கண்டனமெழுதிப் புகழ் படைக்க விரும்புவதிலும் தமக்கு மாற்றலுண்டாயின், அவ்வாற்றலுக்கேற்பத் தமிழ்த் தொண்டு செய்து புகழ்படைக்க விரும்புவதே அவர்களுக்கும் எந்நாட்டிற்கும் பெருந் தவமாகும் என்பது எமது கருத்தாகும்.

பண்டிதர்
வி. நவரத்தினம்

# இளங்கோவடிகளும் கண்ணகியும்

## இலக்கிய அரங்கம்

(10-12-48 இதழின் தொடர்ச்சி)

8

'நாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பர் என்பது நெறி. கண்ணகி என்ன வினைக்காக இவ்வாறு துன்புற்றனளோ! தவமுந் தவமுடையார்க்காதலின் எவ்வாறு கொடுமை நீங்கப் பெறுவரோ' என்பது.

இப்பகுதி வசனநடை தெளிவாகக் காணப்படாமையாற்போலும் நண்பர் கொள்கை விளங்கக்கூடவில்லை, ஆஸ்திகர் மதமா இவர் கூற்று என்பது சந்தேகமாகவிருக்கிறது. பிறவி எற்றிற்கு என்று அறிந்த இந்நாட்டிலே—சைவசித்தாந்தம் நின்று நிலவும் இந்த நாட்டிலே கொடியவன் ஒருபோதும் கொடுமை நீங்கப்பெறுனென்ற கருத்துப்படச் சொல்வது என்ன வாதம்? கோவலன் முற்பிறப்பிற் கொலைக்குற்றஞ் செய்தவன். அதனுல் வெட்டுண்டான். அவன் மனைவியாக முற்பிறப்பில் இருந்த தொடர்பினுல் இப்பிறப்பிலுந்தொடர்புற்று துன்புற்றாள் கண்ணகி. முற்பிறப்பில்தவமுஞ்செய்துள்ளாராதலின் இப்பிறப்பிற் கொலை வினை அனுபவித்தபின் கடவுளாகின்றார்கள். முற்பிறப்புக்களிற் கோவலனுங் கண்ணகியுந் தவஞ்செய்துடையர் என்பதை எவ்வாறறிதிர் எனக் கேட்பார்க்கு அஃதும் 'உடம்பொடுபுணர்தல்' என்பதனுற்சிலப்பதிகாரத்திலேயே கூறப்பட்டு அறிந்தேமென்க. அல்லாக்கால் அவர்கள் தெய்வநிலை யடைதல் சாலாதென்க. இன்னோரன்னவையெல்லாம் முன்னரே வித்துவான் அவர்களாலும் பிறராலும் சந்தேக விபரீதங்களுக்கு இடமின்றி நாட்டப்பட்டுள்ளமையின் அதிகம் கூறுதல் வேண்டியதன்று.

9, 'சமணர்களுக்குத் தமிழ்ப் பொருள்மரபு தெரியாதென்பது.'

ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயன் அறிகிலா அந்தகர் என்று சம்பந்தர் கூறியது அவர்காலச் சமணரையே. இக் கூற்றைக் கொண்டு சமணர்கள் அனைவர்க்குமே ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயன் தெரியாதென்று நாட்டுதல் நன்றன்று.

சரி; ஆரியத்தொடு செந்தமிழ்ப்பயன் சமணர் அனைவர்க்குமே அறியார் என வைத்துக் கொள்ளுவோம். சம்பந்தர் கருத்தை அறிந்துகொண்டன்றே அவர் கூற்றுக்களைப் பொருத்திப் பார்த்தல் நலம். அல்லாக்கால் அரங்கின்றி வட்டாடினுற்போல முடியுமன்றே? கற்பிற்குத் தகுந்த வரைவிலக்கணம் வைத்துக்கொள்ளாது கண்ணகி கற்பை யாராய்ந்தமையாலன்றே விவாதம் தொடரவேண்டியேற்பட்டது. ஆதலால் இவ்விடத்தில் சம்பந்தர் மனக்கருத்தை அளவிடல் அவசியம். சமய குரவர்களெல்லாம் எச்செயலும் இறைவனை நோக்காகக்கொண்டே செய்யப்பட வேண்டுமென்னுங் கருத்துடையர். ஆரியத்தொடு செந்தமிழ்ப்பயன் சிவனை வழுத்துதலே என்பது சம்பந்தர் கருத்தென்பதைச் சைவசமயிகள் எவரும் மறுக்கத் துணியார். ஆதலால் சிவனை வழுத்துஞ் செல்வமற்ற சமணரை ஆரியத்தொடு செந்தமிழ்ப்பயன் அறிகிலா அந்தகர் என்று சம்பந்தர் கடிந்தார். இதுகொண்டு சமணர்க்குத் தமிழ்மரபு தெரியாதென்பது சான்றோர் கொள்கையொடு மாறுபட்டதாம். சங்கச் செய்யுட்களையெல்லாம் தெய்வப் பாடல்களாகப் பேணும் நாம் சமணர்க்குத் தமிழ்ப் பொருள் மரபு தெரியாதென்று மறந்தும் கூறலாகாது! சங்கப் புலவர்களில் சமணமதப் புலவராய உலோச்சனர் ஒருவரன்றோ? இவர் பாடல்கள் தமிழ்ப்பொருள் மரபற்றன என்று எவரேனுங் கூறுவாராயின் தமிழ்நாடு ஒப்புமா? சாத்தனுரும் சங்கப் புலவரல்லரோ? அறிஞர்களே இது ஒவ்வொன்றாகத் தமிழ் இலக்கியங்களை அப்புறப்படுத்தத் திரைமறைவில் நடந்து வருஞ் சூழ்ச்சியா? தமிழ்க்காகவே வாழ்ந்த இப்புலவர் பெருமக்களைச் சமணர்கள் என்ற ஒன்றிற்காகப் பொருள்மரபு தெரியாதார் என்று இகழ்வதைப் பொறுக்கலாமா? சிந்தாமணியும் சமயநோக்கிற் கண்டபோது சேக்கிழாருக்குப் பயனற்ற நூலாகத் தெரிந்தது. தமிழ்நோக்கில் சிந்தாமணி உயர் தமிழ்க் காப்பியமே. அல்லாக்கால் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் சிந்தாமணிக்கு உரை வரைந்திருப்பாரோ?

[illegible] யணம் சிறந்ததெனவோ இளங்கோவிற் கம்பன் பெரும் புலவனென்றே நிலைநாட்டுதற்கு வேறொரு வழியும் இன்றெனக் கண்ட வித்துவான் கம்பன் மறைவிட வர்ணனைகளால் உயர்ந்த புலவனுயினுன்போலும் என அபிப்பிராயப்படுகிறார். நண்பர் திரு. நடராசா இதனுற் கம்பர் உயர்ந்தாரல்லர் என்று கூறிவிட்டார். அவ்வாறு கூறியவர் கம்பன் அறத்தை நிலைநாட்டியமையால் உயர்ந்தானெனக் கூறுகிறார். அறமுறையைச் சிறிது சிந்திப்பாம்.

10. கோவலன் பாண்டியனது அரசியற் சிறப்புக்கூற அதனைக் கண்ணகி உடனிருந்து கேட்டும் 'கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றுரே' என்று கூறியது அறமன்று என்கிறார் நண்பர். பொதுப்படையாகக் கோவலன் மதுரையைப் புகழ்ந்து கூறியதைக் கேட்டாள் கண்ணகி. கோவலனும் மதுரைவாசியல்லனுதலின் தான் அறிந்தவரையிற் கூறினுன். அவை கண்ணகியால் நம்பப்பட்டன. கோவலன் கூறியது பொய்யன்று. பொய் கூறினனென்று கண்ணகி நினைத்ததாகக் கூடச் சிலப்பதிகாரம் உரைக்கவில்லை. கோவலன் வெட்டப்பட்டபோதுதான் பாண்டிநாட்டில் இலைமறை சருகுபோல் தீயரும் உளரெனக் கண்ணகி உணர்ந்தாள். அதனுல் குடிகள் செய்த பாவம் முழுவதற்கும் பொறுப்பு மன்னனுதலின் மன்னனிலும் அமைச்சரிலும் அக்குற்றத்தைப் பாரித்துக் 'கொன்றுரே' என்று கூறினுள். 'அவனே அரசன். என் கணவனே சிலம்பு விற்கச் சென்றவன். அரசன் சிலம்பு தேவையாயின் விலை கொடுத்துப் பெறலாமே. அவ்வாறு கொள்ளும் விலை கொடுத்துப் பெருது அரசனுயிருந்தும் கொன்றுனே என்று கண்ணகி கூறியதில் அறத்திரிபு உண்டா. இப்பகுதி உரைக்குறிப்பு 'வியந்தவாறு' என்று கூறியிருப்பதையும் நோக்குக. அல்லது பொதுப்படையாகக் கூறுவதற்கும் சிறப்புவகையால் நோக்குவதற்கும் வேறுபாடின்றெனிற் சிலப்பதிகாரத்தில் நண்பர்கள் இன்னுமொரு குறை காணப் போகின்றார்களே.

'திருந்து தொழில் மறையவர்' (மதுரை, கட்டுரை 74) என்று கூறிய இளங்கோ திருந்து தொழில் அந்தணருடைய சிறுவர் களவு செய்தாராகக் கூறுவதை இதுவரை நண்பர் எடுத்துக்காட்டாதது விந்தையே. இவ்விடத்தில்,

'தக்கார் தகவில
ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்'

என்று கொண்டு மக்கள் தீயவராளுல் தந்தையர் நல்லவராதலெப்படி என்ற விவாதத்தை எழுப்பாததேனே? சூரபன்மனுடைய அரசியற் சிறப்பைக் கந்தபுராணம் கூறவில்லையா? அங்கே கொடுமைகள் நிகழவில்லையா? இவைபோல எக்காவியங்களிலும் உண்டே. தசரதனது அரசிருக்கை போற்றிப் புகழப்படவில்லையா? அங்குக் காலக்கோளனுளாய கொடுமனக் கூனி தோன்றவில்லையா?

இராமாயணத்தில் வரம் வாங்கிக்கொண்டு கைகேயியையும் பரதனையும் காப்பாற்றுகிறார் கம்பர். இதுதானு அறம். தசரதன் மன்னிக்கலாம் கைகேயியை. இராமனும் தெய்வமாதலின் பொறுக்கலாம். கணவனுயிரைப்போக்கிய அவளை நாம் மன்னிப்பதெப்படி? அவளை அறச்செல்வியாக்க முற்பட்டு வரம் வாங்கியதும் கொடுத்ததுமே பிழையென்று சீர்திருத்தவாதிகள் சொன்னுல் விடையாது? கோவலன் மணிமேகலை பிறந்தபோது தானம்பெற வந்திருந்த அந்தணனை மத யானையினின்றுங் காத்தது முதலாய அறச்செயல்களை அடைக்கலக்காதை நன்கு எடுத்துச் சொல்லுகின்றதே. கண்ணகியின் அறச்செயலை மதுரை தெரிக்கிறதே. இருவரையும் மாசு மறுவுக்கிடமின்றி நடத்திச் செல்கிறுரே இளங்கோ. கம்பன் கைகேயியையும் பரதனையும் அறத்தவராக்கினுன் வரம்பெற்று. ஆனல் கூனியை எப்படி அறத்தாளாக்கினுன்? அறிஞர்களே விடை பகருங்கள்.

'......பரவை யல்கு
லொளிபுறத் தளிப்ப வுள்ளத்
தயர்வுறு மதுகை மைந்தர்க்
கயாவுயிர்ப் பளித்த தம்மா'

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

பண்டிதர்
க. நாகலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் வர்ண ஜாலம்

அத்தியாயம் — 19.

பிரித்தானிய சாம்ராச்சியத்தில் ஸ்ரீலங்கா வெற்றி கொள்ள முடியாத நாடென்பது உலகறிந்த விஷயமாகும். இலங்கைப் பிரதிநிதிகள் சபையின் தலைவரே இதற்குச் சிறந்த மேற்கோளாக விளங்குகின்றார்.

வேற்றரசர்களின் ஆட்சி நிலவாத ஓர் இடம் அகில உலகத்திலும் இருக்குமாயின் அது இந்த இலங்காபுரியே யாகும். பேரறிஞர்கள் நடாத்திவரும் சிறந்த ஆராய்ச்சியே இதற்குச் சான்று பகருமென நாங்கள் எதிர்பார்த்திருக்கலாம்.

கீழைத் தேசங்களில் முதன் முதலாகச் சர்வஜன வாக்குரிமையை அனுபவிக்கும் பேறு பெற்ற நாடு ஸ்ரீலங்காவேயாகும். இந்த ஆசீர்வாதம் ஆண் பெண் ஆகிய இரு பாலார்க்கும் கிடைத்திருக்கின்றது.

இவ்வளவு அஸ்திவாரமும் பண்பாடும் நிறைந்த ஸ்ரீலங்கா மனிதனின் உரிமைகளுக்காகவும், உலகினில் ஜனநாயகம் அழிந்தொழியாதிருப்பதற்காகவும், தன்னாலான பங்கை உதவ முயற்சிப்பது மிகவும் பொருத்தமானதொன்றாகும்.

இத்துறையில் முன்னேறுவதற்காக வர்ணப் பெட்டி வாக்கு முறை முதற்படியாக அமைந்தது. வேறெந்த நாடுகளும் வர்ணப்பெட்டி வாக்கு முறையைக் கையாளுவதற்குக் கனவிற்றானுங் கருதியதே கிடையாது. ஸ்ரீலங்கா இதை நடைமுறையிற் கொண்டுவந்ததில் இருந்து இந்நாட்டு மக்கள் மகாவித்துவான்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. ஆகவே, ஜனநாயக வளர்ச்சிக்காக நாங்கள் வர்ணப் பெட்டிகள் மூலம் மிகுந்த சேவை செய்துள்ளோம். இது பொன்னெழுத்துக்களிற் பொறிக்கப்பட வேண்டிய ஒரு சம்பவமாகும். சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள், வெண்மை, ஆகியாம் வர்ணங்களுக்கு எங்கள் வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை உதவினர். பொறுப்புள்ள அதிகாரிகளுக்கு ஏற்ற வர்ணங்கள் வாங்கிக்கொள்ளும் திறமை இல்லாத காரணத்தாற் சில வேளைகளிற் இந்த வர்ணங்கள் ஒன்று சேர்ந்து கலந்துகொள்வதுமுண்டு. இத்தகைய ஒருசந்தர்ப்பத்தில் நீலப் பெட்டிக்கு வாக்களிக்க வேண்டியவர்கள் பச்சைப் பெட்டிக்குள்ளே தங்கள் வாக்குகளைப் போட்டனர். பச்சைப் பெட்டிக்குப் போட வேண்டிய வாக்குகள் ஒரு சமயம் நீலப் பெட்டிக்குள்ளே புகுந்துகொண்டன. உண்மையாகவே வர்ணங்கள் இல்லாத காரணத்தினாலோ, அன்றேல் கவனக் குறைவாலோ இந்த நிலைமை ஏற்படவில்லை. ஆனால் இது ஓர் உயர்ந்த நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டே நடைபெறலாயிற்று. இந்த நோக்கம் இப்போது உருவாகி வருவதையுங் கவனிக்கின்றோம்.

> சுதந்திரம் பெற்றுள்ள ஸ்ரீலங்காவானது ஜனநாயகத்தின் வளர்ச்சிக்காகத் தனது சொந்தப் பண்பாட்டுக்கமைந்த ஒரு பங்கை உதவியே தீரவேண்டும். இதைப் பற்றி **ஜாக்கஸ்** இவ் வாரம் எழுதியுள்ளார். இது **டைம்ஸ் ஒவ் சிலோன்** என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளியாகியுள்ளது.
> —ப-ர்.

அரசியலுக்கு எவ்வித உருவமுங் கொடுக்கக் கூடாதென்பது அந்த முக்கிய நோக்கமாகும். வர்ணப்பெட்டி வாக்களிக்கும் முறை இந்த வேலையை ஓரளவுக்குத்தான் செய்து முடித்தது. வாக்காளர்களின் கவனம் முழுவதும் வர்ணத்திற் படிந்ததேயன்றி அந்த வர்ணத்துக்குப் பின்னால் நிற்கும் அபேட்சகர்மீது எவ்வித நாட்டமும் உண்டாகவில்லை. அபேட்சகரின் நோக்கமும் இத் தன்மையதாகவேயிருந்தது. அவர் அதிக தூரத்தில் நின்று கொள்ளுவதாற் போதியளவு வாக்குகளைப் பெறுவதும் இலகுவாயிற்று.

வர்ணப்பெட்டிகளுக்கு வாக்களிக்கும் முறை அதன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டதும் நாங்கள் அதைக் கைகழுவி விட்டோம். அத்துடன் வாக்காளரும் போதியளவு அறிவையும் பெற்றுக்கொண்டனர். இன்று நாங்கள் அடையாளங்களுக்கு எங்கள் வாக்குகளை உதவுகின்றோம். எவ்வித அபிப்பிராயங்களுக்கும் அசைந்துகொடுக்காத யானை; வரிப்பணம் இறுப்பவர்களின் பிரதிநிதியான பால்தரும் **பசு**; தந்திரம் நிறைந்த அரசியல் வாதிகளின் இனத்தைச் சேர்ந்த '**நரி**'; மாபெருங் கூட்டங்களிலிருந்து விலகிக் குதித்தோடுவதற்கேற்ற '**சைக்கிள்**'; சகலருக்கும் தண்ணளிகாட்டி ஆதரவளிக்கும் **குடை**, பிரயோசனமுள் **மேசை**, பிரகாசிக்கும் **நட்சத்திரம்**, போன்ற அடையாளங்களைப் பார்த்து நாங்கள் எங்கள் வாக்குகளை உதவுகின்றோம்.

இது விஷயத்திலும் நோக்கம் வேறுபடவில்லை, அபேட்சகரைப் புறத்தே நிறுத்தி விடுகின்றனர். அவரைப் பற்றி ஒருவரும் அக்கறை எடுக்கவேண்டியதில்லை. அவருடைய தேர்தல் கொள்கைகளையும் திட்டங்களையும் அறிந்து அவற்றுக்கு வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை அளிக்க வேண்டியது. சமீபத்தில் நடைபெற்ற ஒரு தேர்தலின்போது, அதிற் போட்டியிட்ட நான்கு அபேட்சகர்களையும் ஓரே மேடையிலே தோன்றித் தத்தம் நோக்கங்களை அம்பலப்படுத்தும்படி அத்தொகுதியிலுள்ள சில வாக்காளர் வேண்டிக்கொண்டனர். மூவர் இதற்கு உடன்பட்டனர். ஒருவர் மறுத்துவிட்டார். அரசியலானது இன்று 'அவர் இவர்' என்ற வரம்புகளைக் கடந்து கொள்கைகளை நாடி நிற்கின்றதென்பதற்கு இது ஓர் உதாரணமாகும்.

## நவீன ஆராய்ச்சி

சுயேச்சைப் பிரதிநிதிகள் மேடைமீது ஏறித் தங்கள் கொள்கைகளை வாக்காளருக்கு எடுத்துக் கூறுவது அவசியமானதொன்று. அரசியற் கட்சிகளைச் சேர்ந்த அபேட்சகர்களுக்கு மாத்திரம் இந்தக் கஷ்டம் இருப்பதில்லை. அவர்களின் சார்பாக அவர்களுடைய கட்சிகளே பிரசாரம் செய்து தங்கள் கொள்கைகளைப் பரப்பிவிடுகின்றன.


இந்தவிதமான கொள்கையைப்பற்றி எத்தனையோ வருடகாலத்துக்கு முன்னர் ஒருவர் சுருக்கச் சொல்லி விளங்க வைத்திருந்தார். 'கட்சி அரசியல்வாதிகள் தங்கள் மூளையின்படி செய்வதில்லை; அவர்கள் தங்கள் தலைவர்களின் கட்டளையைச் சிரமேற்கொண்டு அவர்கள் விரும்பும் அபேட்சகர்களுக்கு வாக்களிக்கின்றனர்,' என்பதே இரத்தினச்சுருக்கமான அக் கூற்றாகும். பிரிட்டனில் நிலவும் அரசியல் முறையைப் பின்பற்றியே ஸ்ரீலங்காவில் ஆட்சிமுறை அமைக்கப்பட்டிருப்பதைக் குறித்து அவ்வாறு கூறப்பட்டது.

இதுவரை நாங்கள் பிரிட்டனின் அடிச்சுவட்டைப் பின்பற்றித் திருப்தியடைந்துவந்தோம். ஆனால் இன்று நாங்கள் சுதந்திரம் பெற்றிருப்பதால் நாங்களும் எங்களுக்குச் சொந்தமான ஒரு முறையை ஏற்படுத்தி அரசியலை வளம்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

திறம் ஜேர்மன் சீமேந்து

KEY BRAND GERMAN CEMENT



திறப்பு மார்க் ஜேர்மன் சீமேந்து

MADE IN GERMANY

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த 'திறப்பு' மார்க் ஜேர்மன் சீமேந்து
[KEY BRAND GERMAN CEMENT]

இந்த மாதத்தில் யாழ்ப்பாணம் துறைமுகத்துக்கு S. S. INDIAN MERCHANT என்ற புகைக்கப்பலில் வருகிறது. வேண்டியவர்கள் கீழ்க்கண்ட விலாசத்தில் விலை சகாயமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

முன்பு யாழ்ப்பாணத்தில் திறப்பு மார்க் சீமேந்து மிகவும் பெயர்பெற்று விளங்கியது.

இப்றுஹிம் ஜபர்ஜீ
ஆஸ்பத்திரி ரோட் :: பெரியகடை
யாழ்ப்பாணம்

IBRAHIM JAFFERJEE
HOSPITAL ROAD ; GRAND BAZAAR
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னுகம், சர்வதாரி மார். கக
— சாந்தி ஆண்டு 80 —


## சமயக் கல்வி

வித்தியாசாலைகளிற் சமயக் கல்வி கற்றுக்கொடுக்கும் விஷயத்தில் இந்தியாவிலென்ன, இலங்கையிலென்ன, உலகிலுள்ள மற்ற எந்த நாட்டிலென்ன எவ்வித ஆட்சேபமுங் கிடையாது. ஆனால் விரும்பிய முறையில் அதனை நன்மையுடன் கற்றுக்கொடுப்பது எப்படி என்பதுதான் இன்னும் திருப்தியாக முடிவு செய்யப்படவில்லை. இப்போது நடைபெறும் வித்தியாசாலைகளும் அங்கே கற்றுக் கொடுக்கப்படும் கல்வியின் நோக்கமும் ஏற்ற முறையில் மாற்றமடைந்தாற்ருன், சமயக்கல்வி வித்தியாசாலைகளில் இனிது வளர்ச்சியடைய இடமுண்டு. உத்தியோகத்தை இலக்காகக் கொண்டு லௌகீக நோக்குடன் கல்விகற்கும் மாணவர்கட்கு சமயக் கல்வியைப் பயிற்றுவதென்பது சாதாரணமாகக் கூடியதொன்றன்று. வித்தியாசாலைகளில் சமயக் கல்வி ஒரு விளையாட்டுப் பொருளாகவே கருதப்படுகின்றது. அக்கல்வியில் அக்கறைகாட்டுவார் எவரையும் காணேம்.

இக்கல்வி உண்மையாக நமது வித்தியாசாலைகளில் நிலைபெறச் செய்யவேண்டுமாயின், கவனிக்கப்படவேண்டிய அவசிய காரியங்கள் பலவுள. மாணவர்கள் சமயக் கொள்கைகட்கும் கல்விக்கும் ஆர்வங் கொள்ளக் கூடியதாகிய சூழலை நிலைபெறச்செய்ய வேண்டும். கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் சமய சாஸ்திரங்களை அறிந்தவராகவேண்டும். சமய ஒழுக்கங்களைக் கைவிடாதவர்களே ஆசிரியர்களாக அமைவதும் இன்றியமையாத விஷயம். சமய சம்பந்தமான பெருநாட்களை மிக்க பக்தி விசுவாசத்துடன் ஆசிரியர்களும் முகாமைக்காரரும் நடத்தவேண்டும். பிரத்தியேகமான மாண்பும் மதிப்பும் சமயாசாரத்துக்கு உண்டு என்பதை ஆசிரியர்கள் தமது வாழ்க்கையிற் காட்ட வேண்டும். பொதுவாக மாணவரின் மனப்பான்மை ஆசிரியர்களை இலக்காகக்கொண்டே செல்வது இயல்பு. ஆகவே, மேற்காட்டிய விஷயங்களை முற்ருக மறந்து மாணவர்கள் சமயக் கல்வியைக் கற்க விரும்புகின்ருரில்லை யென்று குறை கூறுவதாற் பயனென்றுமில்லை.

ஆசிரியர்கள், சமயசாஸ்திரங்களை நன்கு கற்றுக் கொள்ளாதிருக்க, அவர்கள் சமயக்கல்வி பயிற்றுவார்களென்றும் மாணவர்கள் நம்பிக்கையுடன் அவர்களிடம் அதனைக் கற்பாரென்றும் எப்படிக் காத்திருப்பது? பஞ்சமாபாதகங்களினின்று நீங்கிய ஆசிரியர்களே மாணவர்கட்குச் சமயத்தைப் பயபக்தியுடன் கற்றுக்கொடுக்க வல்லார். அவர் சொல்வனவே மாணவர் மனதிற் படியக் கூடியன. வித்தியாசாலைகளில் மாத்திரமன்று மாணவர்கள் இல்லங்களிலும் சுற்ருடல்களிலும் சமயப்பண்பும் உணர்ச்சியும் உண்டாகச் செய்யவேண்டும். இல்லங்களில் தாய் தந்தையர் சமய வாழ்க்கையை நடத்தவேண்டும்; கடவுள் வணக்கம், தோத்திரபாராயணம் என்பனவற்றில் நாடோறும் ஈடுபடவேண்டும். அப்போதுதான் மாணவர்கட்கும் சமயத்தில் அபிமானமும், சமய அறிவைப் பெறவேண்டுமென்ற அவாவும் ஆர்வமும் உண்டாகும். இவ்வாறன்றித் 'துலுக்க தெருவில் தேவாரம் பாடுவதுபோல' சிறிது நேரத்துக்கு மாத்திரம் வித்தியாசாலைகளிற் பலவந்தமாகச் சமயக்கல்வி கற்பித்து நன்மையைப் பெறப்போவதில்லை. இவ்விஷயமாக வித்தியாசாலை முகாமைக் காரரும் ஆசிரியரும் விசேஷமான ஊக்கங் காட்டுவது அவசியம்.

இப்போது வித்தியாசாலைகளிற் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பொதுவாகச் சமய அறிவு இல்லாதவர்கள். இதை எவரும் மறுக்கவியலாது. ஆகவே, வித்தியாசாலை விடுமுறைக் காலங்களில் சமய வகுப்புகள் ஏற்படுத்தி ஆசிரியர்களை இத்துறையிற் பயிற்றுவது இன்றியமையாத தொன்ரும். இவ்விஷயமாகச் சைவ மகாநாட்டினர் சிரத்தை கொள்வது மிகவும் போற்றப்பட வேண்டிய விஷயம். சமயக் கல்வியுடன் சமயப் பழக்க வழக்கங்களையும் நிலைபெறச் செய்யவேண்டும். ஆசிரியர்கள் சமய சாஸ்திரங்களை நன்கு கற்று சமய ஒழுக்கங்களை மேற்கொண்டவர்களாக இருப்பின், கற்றுக் கொடுக்கப்படும் சமயக் கல்வியும் விரும்பிய பயனை அளிக்குமன்ரே. உண்மையான வாழ்க்கையோடு கூடாதவர்களாற் கற்றுக்கொடுக்கப்படும் சமயக்கல்வி, நீரிலெழுத்துப்போல் நிர்ப்பிரயோசனமாக முடிவது திண்ணம்.

மேலும் வித்தியாசாலைகளிலுள்ள பல்வேறு வகுப்புகட்கு ஏற்ற முறையிற் சமய பாடப் புத்தகங்கள் இயற்றுவதும் இன்றியமையாத விஷயம். சைவ சாஸ்திர விற்பன்னர் பலருள்ள நம் நாட்டில், இக்குறையிருப்பது பெரிய வெட்கத்துக்கு இடமாகும். மாணவர் சமயக் கல்வியில் ஊக்கமடையச் செய்வதற்கு வருடந்தோறும் சமயப் பரீட்சைகளும் சித்தியடைந்தோர்க்குப் பரிசுகளும் ஏற்படவேண்டும். இந்தக் கைங்கரியத்தைச் சைவ மகாநாட்டினர் ஏற்று நடத்தின் அதுவே அவர்கள் சமயத்துக்குச் செய்யுந்தொண்டுகளில் தலை சிறந்ததாகக் கருதப்படும். அரசினரும் சமயக் கல்வி விஷயத்தில் அதிகம் ஊக்கங்காட்டி வருவது மிகவும் போற்றற்குரிய விஷயம். இத்தருணத்திற் சைவமக்கள் விழித்தெழுந்து தமதுகடமைகளை இத்துறையிற்செய்வதே வேண்டப்படுவது. இதனல் ஏற்படக்கூடிய நன்மைகட்கு அளவில்லை.

## எமது நன்றி


சென்ற வாரம் யாழ்ப்பாணத்துக்கு ஒரு விசேஷ காலமாகும். சைவ மகாநாடு, சென்னைச் சைவ சித்தாந்த சமாஜம் என்னும் இரு பெரிய சபைகளின் ஆண்டுவிழாக்கள் யாழ்ப்பாண நகரில் நடைபெறலாயின. இவ்விழாக்களிற் கலந்துகொண்ட நூற்றுக்கணக்கான சைவப் பெரியாரும் பெருமாட்டிகளும் இந்தியாவினின்று விஜயஞ்செய்தமையை இங்குவிசேஷமாகக் குறிப்பிடாதிருக்க வியலாது. ஆயிரக் கணக்கான யாழ்ப்பாணச் சைவ மக்களும் விழாக்களிற் சமுகமளித்து பிரசங்கங்களைக் கேட்டு இன்புறலாயினர். அநேக அறிவுக்குரிய சமய சம்பந்தமான விஷயங்களைப்பற்றிச் சைவ சீலர்கள் பிரசங்கங்கள் செய்தனர். சுதந்திரம் பெற்றதன் பேருகப்போலும் இந்தியாவில் மாத்திரமன்று இலங்கையிலும் சமய விஷயமாகப் பேரபிமானமும் புத்துணர்ச்சியுந் தோன்றியுளது. சைவ சமயம் ஈடேற்றமடைவதற்குக் கையாள வேண்டிய முறைகளையும் பலர் எடுத்துக் காட்டினர். இப்பெரிய மகாநாட்டின் தலைமையைத் தாங்கி நன்கு நடாத்திய திருவாளர் ம. பாலசுப்பிரமணியமுதலியாரவர்களின் ஆழ்ந்த சமயப்பற்றினையும், பரந்த சமய அறிவையும், சைவசமய உண்மைகளைத் தெளிவாக எடுத்து விளக்கும் சாமர்த்தியத்தையும் நாம் குறிப்பிடுவது அவசியமாகும். இப்பெரியாருடன் வந்த திரு. க. சு. அரங்கசாமிமுதலியார், திரு T.S. கந்தசாமிமுதலியார், திரு.C. M. இராமச்சந்திரன் செட்டியார் என்போரும் அரிய பெரிய விஷயங்களைப் பற்றி உபந்நியாசஞ் செய்து யாவர்க்கும் நல்லறிவுச்சுடர் கொளுத்தினர். இவ்விந்தியப் பெரியார்க்கு நமது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்ரும். பெருந்தொகையாகச் சமுகமளித்த இந்தியப் பெருமக்களை அன்புடன் வரவேற்று எவ்வித குறையும் ஏற்படாத முறையில் உபசரித்து அனுப்பிய உபசாரணைச் சபையினர்க்கும் யாழ்ப்பாணச் சைவ மக்கள் நன்றி கூறுதல்வேண்டும்.

## தீண்டாமை!

உலகத்தை உலைமூடியால் மூடுவது இயலுவதொன்றன்று. சென்னைச் சைவசித்தாந்த சமாஜத்தினர் தீண்டாமை, ஆலயப் பிரவேசம் என்னும் விஷயங்களைப்பற்றித் தமது அபிப்பிராயத்தைக் கூறிவிடின், யாழ்ப்பாணத்தில் சைவசமயம் பாழாய்ப் போய்விடும் என்று அஞ்சிப்போலும், சிலர் அவர்கட்கு வாய்ப்பூட்டுகள் போட முயன்றனர். அவர்களின் அடாத முயற்சி பலிதமாகாமற்போயிற்று. கடல் பெருக்கெடுத்தாற்போல் முன்னேறிக்கொண்டு செல்லும் உலகத்தைத் துணிவுடன் எதிர்த்துத் தடுப்பதென்பது யாரால் முடியுமோ! சமயமோ, அரசியலோ காலத்துக்கேற்க மாற்றமடையாவிடின் அழிந்தொழிவது நிச்சயம். மேற்காட்டிய இரு விஷயங்களிலும் தமது அபிப்பிராயம் யாதென்பதைத் திருவாளர்கள் பாலசுப்பிரமணிய முதலியாரும் அரங்கசாமி முதலியாரும் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடந்த மகாகூட்டத்தில் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டினர். சைவ உலகம் தழைத்து மேலோங்கி உன்னத நிலையை அடையவேண்டுமாயின், தீண்டாமை முற்ருக ஒழியவேண்டுமென்பதைப் பல சைவ நூல்களிலிருந்து போதிய ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி நன்கு நிலைநாட்டினர். இக்கொள்கை சிலர்க்குப் பிடியாவிடினும், தாம் உண்மையைக் கூறுதிருப்பது முறையன்றெனக் கருதித் தமது கொள்கையை வெளிப்படையாகக் கூறியுள்ளார். இந்தியச் சைவப் பெரியார்கள் இவ்விஷயங்களிற் காலத்துக்கும் உண்மைக்கும் ஏற்றமுறையில் நடந்து செல்ல, யாழ்ப்பாணத்திலுள்ள சில கண்மூடிக் கட்சியினர் மாத்திரம், இன்னும் தமது பிற்போக்கான கொள்கைகட்கு இடமுண்டெனச் சிலுசிலுப்பது மிக அதிசயமாகின்றதே. தாய்நாடாகும் இந்தியாவில் ஏற்படும் மாற்றங்கள் இலங்கையில் வாழும் சைவமக்களையும் தாக்காது போகுமா? எனவே காலத்துக்கேற்ப வேண்டிய வேண்டிய சமய ஆசார திருத்தங்களை யாழ்ப்பாணச் சைவமக்கள் காலந்தாழ்த்தாது செய்துகொள்வதில் எவ்வித துரோகமுங் கிடையாது. இந்தியாவில் சைவ ஆலயங்கள் யாவும் ஹரிஜன வகுப்பினர்க்குத் திறந்து விடப்படலாயின. இந்திய அரசினர் தீண்டாமையை, சட்டம் நிறைவேற்றி ஓட்டிவிட்டனர். விஷயங்களிவ்வாருக, இலங்கைவாழ் சைவ மக்கள் ஒவ்வாத முறைகளைக் கையாண்டு ஏன் தத்தளிக்க வேண்டுமோ? தாய்நாட்டினைப் பின்பற்றின், எவ்வித சஞ்சலமும் நம்மை அடையப்போவதில்லை.

## ஸ்ரீ பி. ஆர். தேவராஜன்

அவுஸ்திரேலியாவிற் சமீபத்தில் நடைபெற்ற ஆசிழக்கு நாடுகளின் பொருளாதார மகாநாட்டுக்கு இலங்கையிலிருந்து சென்ற ஸ்ரீ பி. ஆர். தேவராஜன் (வி. வி. எஸ்.) அவர்கள் நீயூசிலந்துக்கும் சென்றிருந்தார். இலங்கை அரசாங்கத்தின் சார்பாக இந்நாடுகளுக்கு விஜயம் செய்த ஸ்ரீ தேவராஜன் வியாழக்கிழமை (30-12-48) விமான மார்க்கமாகக் கொழும்பு வந்து சேர்ந்தார்.




புதுவருடத்தை வரவேற்று ஆசி கூறுவதும் ஒரு சம்பிரதாயமாகும். பழைய சம்பிரதாயங்களும் கொள்கைகளும் தகர்த்தெறியப்படும் இந்நாட்களிற் புதுவருட சோபனம் மட்டும் புது நிலவு போலப் பிரகாசித்துக்கொண்டே சதா நிலவி வருகின்றது. ஆனற் சமீபத்தில் யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெற்ற ஒரு மாபெருங் கூட்ட நடவடிக்கையைக் கவனிக்கும் போது சைவசித்தாந்தத்துக்கும், வேத ஆகமங்களுக்கும் பொல்லாத காலம் வந்துவிட்ட தென்பதும் வெளிப்படை. 'அவனின்றி, அணுவும் அசையாது' என்பதில் அதிகம் மக்களுக்கு நம்பிக்கையிருக்குமாகில், அணுக்குண்டு யுகத்தில் நடைபெற்று வரும் காரியங்களிலும் நம்பிக்கை வைத்தேயாக வேண்டும். எனவே, 'கட்டுண்டோம் பொறுத் திருப்போம் காலம் மாறும்' எனப் பாரதியார் கூறியதில் எவ்வளவோ உண்மை பொதிந்திருக்கின்றது.

### பாரதி இலட்சியம்

மேற்கு வங்கத் தேசாதிபதி ஸ்ரீ கே. என் கட்ஜு அவர்கள் பாரதியாரின் இலட்சியங்கள் உலகனைத்தும் பரவ வேண்டுமெனப் பெரிதும் விரும்புகின்ருர். "மகா கவி பாரதியாரின் நூல்களை யெல்லாம் பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்த்து, அவருடைய இலட்சியங்களைப் பரப்பும்படி உங்களுக்கு யோசனை கூறுகின்றேன்" என்று கல்கத்தாவிலுள்ள பாரதி தமிழ்ச் சங்கம் சமீபத்தில் ஏற்படுத்திய பாரதி விழாவின் போது பேசிய மேற்கு வங்கத் தேசாதிபதி கூறியிருக்கின்ருர். இதைக் கேட்டு ஸ்ரீ. வ. ரா. பெரு மகிழ்ச்சியடையக் கூடுமல்லவா?

### ஸ்ரீ. ஏ. சுப்பிரமணியம்

இங்கிலாந்திலே பல வருட காலமாக இருந்து ஆங்கிலச் சிறுகதைகள் எழுதிப் புகழ் நாட்டிய ஈழத்து ஆங்கில எழுத்தாளரான ஸ்ரீ அழகு சுப்பிரமணியம் தாய் நாடு வந்து சேர்ந்துள்ளார். சிறு கதைகள் மட்டுமன்றி அருமையான இரு நாவல்களும் எழுதியுள்ளார். புளியமரம் என்ற என்ற அவருடைய சிறுகதைத் தொகுதி யொன்று அச்சாகி வருகின்றது. இது இலங்கைபற்றிய சிறுகதையாகும். இவருடைய சில கதைகள் ருஷிய மொழியிலும் போலந்து மக்களின் பாஷையிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. லண்டனிலுள்ள கவிஞர் தம்பிமுத்து என்பவர் ஸ்ரீ சுப்பிரமணியத்துக்குச் சிறந்தவோர் பிரிவுபசாரம் ஏற்படுத்தியிருந்தார் என அறிகின்றேன்.

# சிரிப்புடன் பிரிந்த மகாத்மா

பட்டாபி, சீதாராமய்யா

அருமைத் தலைவராகும் மகாத்மாகாந்தியை இழந்து பாரத மக்கள் யாவரும் அனுதைகளாயினர். அவர் இடத்தை நிரப்ப எவரையுங் காணேம். எங்கும் பிரகாசித்து நின்ற ஜோதி, சுதந்திர தீபத்தைக் கொளுத்திவிட்ட ஜோதி, அன்பே ருபமாகக் கொண்ட பரமாத்மா. அன்பினைக்கொண்டு காமம், குரோதம், லோபம், மதம், மாச்சரியம் என்ற பகைவர்களாகும் அரக்கனை வென்றதுடன் நில்லாது, மிருக பெலத்தைக் கொண்டு அக்கிரமஞ் செய்த பெரிய சத்துராதிகளையும் வென்ருர். ஆத்மசக்தியே அவரின் பெலன். உண்மையைக் கடைப்பிடித்து அசத்தியத்தை வென்ருர். அறிவைப் பெருக்கி இருளை அகற்றினுர். உண்மை வாழ்வை மேற்கொண்டு இறப்பினையும் வென்றனர். பாரத நாட்டிற்கு ஆத்மசக்தியை அளித்த பெருமை இவர்க்கே முற்ருகவுரியது. இவரது அரிய உயரிய நோக்கங்களையும் கொள்கைகளையும் பிழையாக விளங்கிப் பலர் இன்னற்பட்டனர்; சுயநலத்தை மாத்திரம் கருதிய முதலாளிவர்க்கத்தினர் இவர் மீது துவேஷம் பாராட்டினர். விவசாயிகளும் வியாபாரிகளும் துன்ளிப் பாய்ந்தனர், உத்தியோகத்தினர் இவரைக்கண்டு சினந்தனர். ஒவ்வாத வழிகளை மேற்கொண்ட சமூகக் குழுவினரும் சன்மார்க்க விரோதிகளும் மனக்கசப்படைந்தனர். ஆனல் உண்மைவழி நின்ற மகாத்மா எதற்கும் அஞ்சினுரில்லை. அவர் தொட்டன யாவும் பொன்னுயின. அவர் கையிலுள்ள ஒரேயொரு ஆயுதம் சத்தியமேயாகும். அவரின் தற்பாதுகாப்புக்காகவுள்ள கேடயம் அஹிம்சையே, தாழ்மையே அவரின் பெலன். அன்பே அவரின் போர்முறை. இராச தந்திரிகள், அரசியல் நிபுணர்கள், சேனுபதிகள், அவர் முன் தலைவணங்கி நின்றனர். என்றும் எவரும் அடைதற்கரிய உச்சநிலையினின்றனர். தாம் சிந்தித்துத் தெளிந்ததை செய்கையிற் செய்துமுடித்த சிற்பியும் இவராவர். பாரதநாட்டில் இவரிலுஞ் சிறந்த பொருளாதார நிபுணர் வேறெவருங் கிடையாது.

அரசியலும் சமயமும் ஒன்றற்கொன்ற ஆதாரமுள்ளதென்பதை நன்கு நிலைநாட்டிய இவரின் ஞாபகம் உலகில் என்றும் அழியமாட்டாது. அரசியலுக்கு ஆற்றலை அளிப்பது சமயம் என்பதையும் நிரூபித்துள்ளார் இவர் நிஷ்காமியமாகவே எத்தொண்டினையுஞ் செய்துவந்தனர், இவர்மாட்டு அச்சம் கோபம் என்பன மருந்துக்குங்கிடையா. சுருங்கக் கூறின் இவரையோர் அவதார புருடரென்பாம். தேவுலகத்தினின்று பூவுலகத்தில் நமது மத்தியில் தோன்றி, பாழ்நிலையிலிருந்த உலகினைத் தூக்கிவிட்டவர் இவரேயென்பாம். அடிமையில் ஆழ்ந்து, வாழ்க்கைநிலை சீர்குலைந்து தடுமாறிய இந்திய மக்களை மீட்சியடையச்செய்து அவர்கள் சன்மார்க்க நெறியிற் சேறச்செய்தனர். பின் அவதார புருடர்கள்போல் மறைந்தெய்தினர். சொன்னசொற்றவருத ஸ்ரீ ராமபிரானைப்போற் சத்தியத்தையும் நேர்மையையும் நிலைநாட்டினர். புத்தபெருமானைப்போல் உலகப்பற்றை முற்றே துறந்தனர். கிறிஸ்து நாதரைப்போலத் தொண்டுபுரிந்து தியாகஞ் செய்தனர். நாங்கள் சிரித்துக்கொண்டிருந்த சமயத்தில் அழுதுகொண்டிருந்த இவர், நாங்கள் எல்லோரும் ஒருங்கு துயரில் மூழ்கி மனங்கலங்கிக் குழறி அழ அவர் சிரித்துக்கொண்டு நம்மைவிட்டுப் பிரிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயபுரித் தீர்மானங்கள்

## கலகக்காரர்களுக்கு எச்சரிக்கை

- இந்தியா -

ஜெயபுரியில் நடந்தேறிய காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் பல்வழியிலும் மிகவும் விசேஷமுடைத்தென்றே கூறவேண்டும். சுதந்திரமடைந்த இந்தியாவில் காங்கிரஸ் கட்சியினர் தொண்டு எத்தன்மையதாகவேண்டும் அவர்கள் கொள்கைகள், நோக்கங்கள் யாதாகவேண்டு மென்பதைப் பற்றி அநேக தீர்மானங்கள் நிறைவேற்றப்படலாயின. பிரதானமாக இந்தியா பிரிட்டினுடன் எவ்வித தொடர்பு வைத்திருக்கவேண்டு மென்பதும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இந்தியா எத்தனையோ காரியங்களை அனுட்டானத்திற் செய்து முடிக்கவேண்டியிருப்பதால் இந்தியாவின் நன்மைக்காகவேயன்றி ஏகாதிபத்தியத்தின் நன்மைக்காகவன்று என்பதை நேருஜி நன்கு எடுத்துக் காட்டினர். இந்தியா தன்னுடைய பெலனில், செல்வத்தில் நிற்கக்கூடிய நிலையை முற்றாக அடையவில்லை. மேலும் சுதந்திரம் பெற்ற நாடுகளுடன் சமவுரிமை பாராட்டி நிற்பதேயல்லாமற் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துள் முன்னர்போல் அடங்கி நிற்பதுமன்று. தன்னுடைய சுயமதிப்புக்கும், அதிகாரத்துக்கும், பெருமைக்கும் பங்கம் ஏற்படாத முறையில் இந்தியா இந்தச் சமுதாயக் குழுவிற் சேர்ந்து நின்று தொண்டாற்றுமாயின் அதில் இழுக்கு ஏற்பட இடமில்லை.

### தலைவர்களில் நம்பிக்கை

இக்காங்கிரஸ் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இன்னும் ஒன்றுள்ளது. அது மிகப் பாரதூரமானது. இப்போது அரசியலை நடத்தும் மந்திரிகள் மற்றைய உயர்ந்த அரசாங்க உத்தியோகத்தர்களைப் பிரதானமாக இத்தீர்மானம் குறிப்பதாகும். பெரும்பான்மையான உத்தியோகப் பேர்வழிகள் நேர்மையாகவும், நடுவுநிலைமையில் நடந்துகொள்ளவில்லையென்றும், அவர்கள் சன்மார்க்க முறைகட்கு நேர்விரோதமான காரியங்களைச் செய்கின்றனரென்றும் எடுத்துக் காட்டப்பட்டது. அநேக ஊழல்கள் அரசாங்கத்தில் காணப்படுவது உண்மையே. இவ்வூழல்கள் இப்போது ஏற்பட்டனவன்று. சுதந்திரத்தையடைய முன்னரும் அவைகள் நிலைபெற்று வந்தனவாகும். அவைகளைக் காங்கிரஸ் அரசினர் சடுதியில் நீக்குவது சாமானிய விஷயமன்று. காங்கிரஸ் மந்திரி சபையினர் தம்மைப் புனிதமாக வைத்துக்கொண்டு இந்தக் குற்றங்களைக் கடியவேண்டும். இதுவரையும் மக்கள் சார்பில் நின்று அந்நிய அரசினரோடு போராடிய தலைவர்களே இப்போது அரசாங்க இயந்திரத்தை நடாத்திச் செல்கின்றனர். பொது சனங்கள் அவர்கள்மீது நம்பிக்கை வைக்கவேண்டும். ஆரம்பத்தில் ஊழல்கள் இருப்பது போலத் தோற்றலாம். ஆனல், காலகதியில் இவைகள் யாவும் நீங்கவேண்டியனவே. எனவே, நமது தலைவர்களில் நம்பிக்கை வைப்பதே முறையென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### இந்திய விரோதிகள்

இந்தியா முன்னேற்றமடைவதற்குத் தடைபுரியும் கட்சியினரை நோக்கிச் சர்தார் படேல் கூறிய வார்த்தைகள் இங்குநோக்கற்பாலன. கொம்யூனிஸ்ட் கட்சியினரும், ஆர். எஸ். எஸ் கட்சியினரும் சேர்ந்து இந்தியாவின் பல்வேறு பாகங்களிற் கலகங்களையும் புரட்சிகளையும் உண்டாக்கிவிடப் பிரமாதமான முயற்சிகள்செய்து வருகின்றனர். காங்கிரஸ் மகாசபையுடன் சேர்ந்துழைத்து வந்த சோஷலிஸ்ட் கட்சியும் இப்போது அதனைவிட்டுப் பிரிந்து கலகமுயற்சியில் ஈடுபட்டுள்ளது. இவைகட்கெல்லாம் சர்தார் படேல் ஏற்ற முறையில் எச்சரிக்கை செய்துள்ளார். அஹிம்சையை முற்றாகக் கைவிட்டுப் பலாத்காரத்தால் தமது அதிகாரத்தை நாட்ட எழுங்கட்சிக்கு இந்தியாவில் இடமில்லையென்றார். இவைகளை அடக்கிவிடும் விஷயத்திலே தாம் சிறிதும் தயங்கப் போவதில்லையென்பதையும் நன்கு விளக்கினா. வேண்டுமாயின் எக் கட்சியினரும் சட்டத்துக்கு அடங்கி நின்று தொழிற்பட்டு அதிகாரத்தைப் பெறலாமென்றும் அதற்கு ஒருவரும் தடைசெய்யாரென்றும் கூறினர்.

### சமய ராச்சியம்

இப்போது இந்தியாவில் ஹிந்து அரசியல் ஏற்படவேண்டும் என்று ஆர். எஸ். எஸ். என்ற கட்சியினர் தோன்றி வேலைசெய்கின்றனர். மகாத்மா காந்தியடிகளின் கொலைக்கும் இவர்களே காரணர் எனவும் கருதப்படுகின்றது. அப்போது அடக்கப்பட்டனராயினும் மறுபடியுங் கலகஞ்செய்ய ஆரம்பித்துள்ளார். இவர்கள் கைதிகளாக்கப்பெற்றுச் சிறையில் அடைக்கப்பட்டது யாவரும் அறிந்த விஷயம். இந்தியா எல்லாச் சாதியினருக்கும் சமயிகட்கும் வகுப்பினர்க்கும் பொதுவாகவுள்ளது. இந்துக்கள் அங்கு பெரும்பான்மையோராக வசிப்பினும், இந்து இராச்சியம் என்ற முறையில் அரசியல் நடத்தப்படப் போவதில்லை என்றதைப் பண்டிதர் நேரு ஆரம்பத்திலேயே கூறிவிட்டனர். அதுவே இந்திய அரசாங்கத்தின் அடிப்படையான கொள்கையாகும். பாகிஸ்தான் அரசினர் போற் சமயமுறையில் அரசியலை நடாத்தி உலகம் நகைக்கச் செய்ய இந்தியா விரும்பமாட்டாது. வகுப்வாதத்துக்கும் இந்தியாவில் இடமே கிடையாது

### உலகெங்கும் ஓர் இறைவன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கையிற் சுவை காணமுடியாது......"

"பல நூற்றுண்டுகளாக அந்நிய ஆதிக்கத்திலிருந்த நமது நாடு இன்று சுதந்திர நாடாக விளங்குகிறது. உலகெங்கும் ஒரு கடவுட் கொள்கை நிலவவேண்டும். அன்பும் ஒற்றுமையும் வளரவேண்டுமென நமது நாட்டிலுள்ள இன்றைய பெரியோர்கள் பலரும் எண்ணி வருகின்றனர்."

திரு. பாலசுப்பிரமணிய முதலியார் தமது பேச்சிற் குறிப்பிட்டதாவது:"முதலாவது மகாநாடு சிதம்பரத்தில் நடைபெற்றபோது சேர்.பொன். இராமநாதன் அவர்கள் தலைமை வகித்தார்கள். அத்துடன் சேர். ஏ. கனகசபை, திருவாளர்கள். பொன்னம்பலம் பிள்ளை, அம்பலவாணநாவலர், முதலியார் சபாரத்தினம், சுவாமிநாத பண்டிதர், விபுலானந்த அடிகளார் போன்ற ஈழத்துப் பேரறிஞர்களும் அவ்வப் போது மகாநாட்டுக்குத் தலைமை வகித்தனர். ஆறுமுகநாவலர் தொடக்கம் விபுலானந்த அடிகளார் ஈறாகக் கடல் கடந்து சென்று தமிழ் நாட்டிற் சைவப் பயிரை வளர்த்துவந்தனர்."

வழக்கறிஞர் வே. நாகலிங்கம், கோவைக் கிழார் திரு. ஸி. எம். இராமச்சந்திரன் செட்டியார், சாத்தூர் வழக்கறிஞர் டி. எஸ். கந்தசாமி முதலியார் உட்பட பல அறிஞர்கள் மகாநாட்டில் சொற்பொழிவுகள் ஆற்றினர்.

### நமது வாசிகசாலை

**பாரிஜாதம்–காங்கிரஸ் மலர்:** நிர்வாக ஆசிரியர்: வி. எஸ். கிருஷ்ணஸ்வாமி, ஆசிரியர்கள்: கே. அருணசலம் 'வஸந்தன்', விலாசம்: 33, பிராட்வே, சென்னை 1. விலை: அணு 12.

பாரிஜாதம் மார்கழி வெளியீடு காங்கிரஸ் மலராக வெளிவந்திருக்கிறது. காங்கிரஸின் சரித்திரம் ஆரம்பமுதல் இன்றுவரை சுருக்கமாகத் தரப்பட்டிருக்கிறது. 'சுதந்திர இந்தியாவில் மக்கள் பொறுப்பு' என்ன என்பதை ஸ்ரீ காமராஜ் விளக்கியிருக்கிறார். சென்னை மாகாணக் கல்விமந்திரி ஸ்ரீ தி. சு. அவிநாசிலிங்கம் ஓர் அமெரிக்கப் பெண் கண் வைத்தியத்துக்காகச் செய்த பெருஞ் சேவையைப்பற்றி எழுதியுள்ளார். ஸ்ரீ இராஜ அரியரத்தினம் இலங்கையில் இந்தியர் நிலைமையைப்பற்றி நடுநின்று ஆராய்ந்திருக்கிறார். ஸ்ரீ ரா. கா., டொக்டர் அளகப்ப செட்டியார்; தேசபக்தன் ஸ்ரீ கே. அருணசலம், ஸ்ரீ சேஷாத்திரிநாதன் போன்ற இன்னும் பலர் எழுதியுள்ளார்கள்;

வஸந்தன் தொடர்கதை; சிறுகதைகள், சிறுவர் பகுதி முதலிய அம்சங்களும், படங்களும் காணப்படுகின்றன. காங்கிரஸ் தலைவர் டொக்டர் பட்டாபி அவர்களை அட்டையிலே தாங்கிச் சித்திரச் சிறப்புடன் பாரிஜாதம் செந்தமிழ் நாட்டிலே மலர்ந்திருக்கின்றது. சி. க. வி.

**ஆத்மஜோதி:** கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன் விலாசம்: 79/6 டொலஸ் பாகேவீதி, நாவலப்பிட்டி. ஆண்டுச்சந்தா ரூபா 3-00. தனிப்பிரதி விலை சதம் 30.

சமரச சன்மார்க்க நெறியைத் தமிழ்மக்கள் கடைப்பிடித்து ஒழுகவேண்டுமென்ற சீரிய நோக்கத்துடன் ஆத்மஜோதி தனது கதிர்களைப் பரப்பி வருகின்றது. ஆசிரியர் உட்பட, திருவளை உமா, சமரசப்பித்தன், [illegible] கட்டுரைகள் எழுதி உதவி வருகின்றனர்.

# கலைக் களஞ்சியம்

சென்றவருடம் டிசம்பர் மாதம் 12-ந் திகதி தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவிற் சென்னைப் பல்கலைக் கழகத்திலே கலைக் களஞ்சியத்தின் மாதிரிப் பிரதிகள் வெளியிடப்பட்டுப் பத்திரிகைக் காரர்களுக்கு வழங்கப்பட்டன. இம்மாதிரிப் பிரதிகளிலொன்று ஈழகேசரிக்கும் அனுப்பப்பட்டது.

இருபது பக்கங்கள் கொண்ட இப்பிரதி கலைக் களஞ்சியத்தின் அட்டையின் தோற்றம் எவ்வாறு அமையும் என்பதையும், எடுத்துக் காட்டுகின்றது. உயர்ந்த நீலவர்ண 'ரெக்சைன்' துணியிற் கட்டப்பெறும் அட்டையிற் பொன்னெழுத்துக்களிற் 'கலைக் களஞ்சியம்' எனப் பொறிக்கப்படும்.

இது சம்பந்தமாகக் கலைக் களஞ்சியத்தின் நிர்வாக சபையின் தலைவரான திரு. தி. சு. அவிநாசிலிங்கம் அவர்கள் முகவுரையிற் கூறுவதாவது: "இதிலுள்ள விஷயங்கள் பல துறைகளிலிருந்தும் பொறுக்கப்பட்டவை. அவையே அவ் விஷயங்களைப் பற்றிய முழுவிவரங்கள் என்று கருதலாகாது. மாதிரிக்காகச் சில பகுதிகள் மட்டுமே தரப்பட்டுள்ளன.

"இவ்விதமாகக் கலைக் களஞ்சியத்தைத் தயாரிக்கச் சுமார் பன்னிரண்டிலிருந்து பதினைந்து லக்ஷ ரூபாய் வரை செலவாகுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. சுமார் இரண்டாயிரம் அறிஞர்களாவது இப்பணியிற் பங்கெடுத்துக் கொள்வார்கள். இதைச் செய்து முடிக்கப் பல ஆண்டுகள் ஆகலாம்."

மாதிரிப் பிரதியிற் சிற்பம், சித்திரம், இலக்கியம், விஞ்ஞானம், சமயம், நாட்டின் செல்வம், என்பனபற்றிய சில குறிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஸ்ரீராம கிருஷ்ணபரம ஹம்சர், சுவாமி விவேகானந்தர், சுவாமி விபுலாநந்தர், சேர் சி. வி. ராமன், ராண்ட்ஜன், (ஒளிக்கதிர்களைக் கண்டு பிடித்த ஜேர்மன் விஞ்ஞான நிபுணர்) ஆதியோரின் புகைப்படங்களுமுள.

சிற்பம், ஓவியம், அணைக்கட்டு தென்னிந்தியப் பறவைகள் சம்பந்தமான பல புகைப்படங்களும், வர்ணப் படங்களும் அழகாக வெளியிடப்பட்டுள்ளன.

கலைக் களஞ்சியம் பற்றிய விபரமான கருத்துக்கள் ஈழகேசரி பிறிதோர் இதழில் வெளியிடப் பெறும்.

ஒவ்வோர் தொகுதியின் விலை ரூ. 25-00. 12 தொகுதிகள் மொத்தமாக வாங்கினுல் விலை ரூ. 250-00 விலாசம்: தமிழ் வளர்ச்சிக் கழகம், பல்கலைக்கழகக் கட்டடம், சேப்பாக்கம் சென்னை 5.

# குரும்பசிட்டி சன்மார்க்க சபை

## ராவ்பகதூர் சி.வை. தாமோதரம்பிள்ளை உருவப்படத் திறப்பு விழா

இம்மாதம் கஎ-ந் திகதி (31.12.48) வெள்ளிக்கிழமை மாலை $7\frac{1}{4}$ மணிக்கு மேற்படி விழா குரும்பசிட்டி சன்மார்க்கசபை மண்டபத்தில் சபைத் தலைவர் ஸ்ரீ. நா. பொன்னையா அவர்கள் தலைமையிற் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தலைவரவர்களின் முன்னுரையின் பின்னர் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்கள், உடல் நலங் குன்றியிருந்தபோதிலும் அதனைப் பொருட்படுத்தாது சமூகமளித்து, தமிழ்ப் பேரறிஞர் சி. வை, தாமோதரம்பிள்ளை அவர்களைப் பற்றிச் சிறு சொற்பொழிவு ஒன்றினை நிகழ்த்தி அன்னாரின் உருவப் படத்தினை திறந்துவைத்தார். இப்படம், ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் பிரதிமைப்படத்தைக் காட்டிலும் சிறந்த முறையில் பல வர்ண மைகொண்டு சைத்திரிகர் 'சாலு' அவர்களால் அழகாகச் சித்திரிக்கப்பட்டது.

அடுத்ததாக, முதுதமிழ்ப் புலவர் மூ. நல்லதம்பியவர்கள் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களின் செயற்கருஞ்செயல்கள் பற்றியும், அவர் தமிழன்னைக்கு, சிறப்பாகத் தமிழ் மக்களனைவருக்கும் உதவிய என்றுமழியாத பொக்கிஷங்கள் யாவை என்பது பற்றியும், இப் பொக்கிஷங்களை அவர்கள் சேகரித்தற்காக உற்ற இடுக்கண்களைப்பற்றியும் மிகவும் உணர்ச்சியுடன் சொன்மாரி பொழிந்தார்.

யாழ்ப்பாணத்திலே இம்முறை நடாத்தப் பெற்ற சென்னைச் சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் 43-வது ஆண்டு நிறைவு விழாவிற் பங்குபற்றிய சாத்தூர் வழக்கறிஞர் திரு. T. S. கந்தசுவாமி முதலியார் அவர்கள் தமிழ் மறையிலுள்ள 'குறள் மணி'கள் சிலவற்றைப் பிரித்தெடுத்து அவற்றின் இலக்கணங்களையும் அவற்றுள் பொதிந்து கிடக்கும் நுட்பமான அரிய கருத்துக்களையும்சிறந்த முறையில் விரிவாக எடுத்துப் பேசினர்.

திரு. ச. அம்பிகைபாகன் அவர்களின் குறிப்புரையின் பின்னர் தலைவர் முடிவுரை நிகழ்த்தினர். ஈற்றில், சபைக் காரியதரிசியால், பிரசாரர்கள் யாவருக்கும், சமுகமளித்த அன்பர்களுக்கும் சைத்திரிகர் 'சாலு' செய்த பேருதவிக்கும் நன்றியுரைகள் கூறப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் வர்ண ஜாலம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறச்செய்தாற்றான் கௌரவமாகும்.

இதற்காகவே ஒரு சில சிந்தனையாளர்கள் அரசியலைச் சட்ட திட்டங்களுக்குள் அமைத்துக் கொள்ளுவதற்கு முனைந்துள்ளனர்.

அபேட்சகரின் தலைக்கறுப்பைப் பக்கத்து வீட்டுக்காரர் தானும் காணாதபோதிலும் பரவாயில்லை. அவர் சேர்ந்துள்ள கட்சியின் கொள்கைகளை அவர்கள் அறிந்தாற் போதுமானது. ஏனெனில் ஆளைப்பற்றி அவர்களுக்கு அக்கறையில்லை. அரசியற் கொள்கைகளே முக்கியமாகும். எவ்வளவுக்கு எவ்வளவு அபேட்சகரைப்பற்றிய பேச்சே எழாது விடுகின்றதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவர் சேர்ந்துள்ள கட்சியின் அரசியற் கொள்கைகள் பிரகாசிக்கும். இந்த அழகில் அந்த அபேட்சகர் முற்றாக மறைந்து விடுவாராயின் அக்கட்சியின் கொள்கைக்குப் பொதுமக்களின் ஆதரவு அபரிமிதமாகக் கிடைத்துவிடுகின்றது.

ஆகவே, அபேட்சகர்களை முற்றாக அகற்றி விடுவதுபற்றிப் பேரறிஞர்கள் ஆலோசனை செய்து வருகின்றனர். ஆனால் வாக்காளர்களும் மனிதர்களாகையால் தாங்கள் யாருக்கு வாக்களிக்கின்றனர் என்பதை அறிந்துகொள்ள விரும்புகின்றனர். ஒரு கொள்கைக்காக வாக்களியுங்கள் என அவர்களுக்குக் கூறுவதில் ஒருவித பிரயோசனமுமில்லை. அந்தக் கொள்கைகளைக் கண்ணாற் பார்க்க வேண்டுமென அவர்கள் வற்புறுத்தி நிற்கவுங் கூடும். மாபெரும் கூட்டங்கள் கூடும்போது பல்வேறு கேள்விகள் கேட்டுக் கூட்டத்தைக் குழப்புவதுடன் நில்லாது அபேட்சகர்களைப் போட்டுப் பிடிக்கவும் கூடும்! இதற்காக ஒரு அரசியல் மாணுக்கன் அருமையான ஒரு யோசனையைத் தெரிவித்திருக்கின்றார். நரம்பும் தசையும் சேர்ந்து உயிருடன் ஓடியாடித் திரியும் அபேட்சகருக்காக வற்றி உலர்ந்த மரத் துண்டுகளுக்குக் குறித்த கட்சிகளின் விலாசங்களை எழுதி ஒட்டிவிட வேண்டுமென்பதே அந்த யோசனையாகும்.

இதனால் ஏற்படும் நன்மைகள் அளப்பில.

1. அபேட்சகர்கள் பனியில் நனைய வேண்டியதுமில்லை; வெயிலில் உலர வேண்டியதுமில்லை. இதனால் உயிருக்கே ஆபத்தில்லாமற் போய்விடுகின்றது.

2. அபேட்சகர்களின் திறமையைப்பற்றியோ, அவர்களுடைய நடத்தையைப்பற்றியோ, அவர்களின் குறை குற்றங்களைப்பற்றியோ அபேட்சகர்கள் விசாரிக்க வேண்டியதில்லை.

3. தேர்தலை ஆட்சேபித்து வழக்குத் தொடரவும் முடியாது. ஏனெனில் ஒரு மரத்துண்டானது மற்ற மரத்துண்டு கைலஞ்சம் கொடுத்தோ அன்றேல் கள்ளத்தனமாக வாக்குகள் பெற்றோ வெற்றிபெற்றவென எப்படிக் குற்றஞ்சாட்டிவிட முடியும்.

4. வாக்காளர்களின் முகங்களைத் தடவிப் பொன்னான காலத்தை மண்ணாக்காமல், அரசியல் வாதிகள் அனைவரும் அவப்பொழுதைத் தவப்பொழுதாக்கி நாட்டின் வளர்ச்சிக்காக உழைக்கலாம்.

5. காத்திரமான மரங்களைப்பற்றி ஆராய்வதற்கும் இது ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கும். அத்துடன் இலங்கையில் இத்தகைய மரங்கள் மலிந்து விளங்குகின்றன. தற்போது இலங்கையிலுள்ள மரங்களைப்பற்றிய விபரங்களே மக்களுக்குத் தெரியாது. மரத்துண்டுகளை மனித உருவத்திற் கடைந்தெடுத்துக் கண், மூக்கு என்பன வைத்துப் பெரிய கூட்டங்களில் நிறுத்தி வைத்தால், அத்துண்டுகள் மீது பழுதடைந்த முட்டைகளையும் அழுகிய தக்காளிப் பழங்களையும் மக்கள் எறிவார்கள். போத்தல்கள், கல்கள் போன்ற சாமான்களும் சரமாரியாகப் பொழியக்கூடும். இவற்றையெல்லாம் அம் மரத்துண்டுகள் பொருட்படுத்தாது தலைநிமிர்ந்து நிற்குமாயின் அத்தனையும் நல்ல மரங்கள் என்பது பலரும் கண்டறிந்த உண்மையாகிவிடும்.

இம் முறையை நாடு ஏற்குமாயின் தேர்தல் மிகச் சுலபமாகிக்கொள்ளும். சகல கட்சிகளும் மரத்துண்டுகளைத் தேடி அந்தக் களிமண் மூளைகளுக்குத் தங்கள் கட்சிகளின் திட்டங்களைப் பசைபூசி ஒட்டிவிடுவார்கள். வாக்களித்து முடிந்ததும் எந்த மரத்துண்டு மாடாசாமிக்கு அதிகமான வாக்குகள்கிடைக்கின்றனவோ அந்த ஆசாமி தேர்தலில் வெற்றியடைகின்றார்.

அரசாங்க சமாச்சாரப் பத்திரிகையில் இந்த மாடாசாமிகளின் பெயர்கள் பிரசுரமாகி, அவர்களுக்கு மலர்மாலைகள் சூட்டியபின்னர் அவர்கள் பிரதிநிதிகள் சபைக்குச் சென்று அங்கு வீற்றிருக்கின்றனர். சில மரத்துண்டுகள் தங்கள் கட்சிக்கான முத்திரைகளையும் அணிந்து கொள்ளுகின்றன. அங்கு வாக்குகள் எடுக்கும் நேரம் வந்ததும், பிரதிநிதிகள் சபையின் ஒழுங்கு முறைகளுக்குப் பொறுப்பாயுள்ளவர் ஒரு சாவியைப் பிடித்து முறுக்கவேண்டியதுதான்; உடனே அந்த மரத்துண்டுகளுக்குள்ளேகிடக்கும் மூளைகள் வேலை செய்யத் தொடங்கி, 'ஆம்' அல்லது 'இல்லை' என்று பதில் அளித்துவிடுகின்றன! இது குறித்த கட்சிகளின் அபிப்பிராயங்களைப் பொறுத்துள்ளது.

இதுதான் ஊழல் எதுவும் இல்லாத புத்தி நுட்பமான முறையாகும். இதிலே தனிப்பட்டவர்களின் செல்வாக்குகளுக்கு இடம் கிடையாது. அரசியற் கொள்கைகளும் திட்டங்களுமே இங்கு முக்கிய ஸ்தானம் பெறுகின்றன. ஜனநாயக வளர்ச்சிக்கும் அதன் முன்னேற்றத்துக்கும் ஸ்ரீலங்கா தனது பணத்தை உதவுதலில் அது [illegible] தேர்தல் முறையேயாகும்.


பூகோளத் தொடர்

**பூமிசாஸ்திரம்**

நான்காம், ஐந்தாம் புத்தகங்கள்

★

பலகாலம் ஆசிரியராயிருந்து அனுபவம்பெற்ற திரு. வே. மு. சபாரத்தினசிங்கம், B. A., அவர்களால் 4-ம், 5-ம் வகுப்புகளுக்கென, பாடத் திட்டத்துக்கமையச் சிறந்த முறையில் எழுதி வெளியிடப்பட்டிருக்கின்றன.

4-ம் புத்தகம் — சதம் 80
5-ம் புத்தகம் — ரூ. 1-00
தபாற் செலவு வேறு

★

சுன்னாகம் : தனலக்குமி புத்தகசாலை


## சிம்மத் தூண் திறப்பு விழா

### அதற்கான ஏற்பாடுகள்

பௌத்தர்களின் புனித நகரமான அனுராதபுரத்தைப் பாதுகாக்கும் உத்தேசத்தோடு நிர்மாணிக்கப்படவிருக்கும் புதிய நகரத்திட்டத்தின் அங்குரார்ப் பணத்தை ஞாபகப்படுத்து முகத்தால்ஸ்தலஸ் தாபனவைத்திய சுகாதாரப் பகுதி மந்திரி ஸ்ரீ. பண்டாரநாயகா 20 அடி உயரமுள்ள கருங்கற் சிங்கத்தூண் ஒன்றைத்திறந்து வைக்கும்போது ராமன்ன, அமரபுரா சயாம் ஆகிய மூன்று பிரிவுகளையும் சேர்ந்த 100-க்கு அதிகமான பிக்குகளைக் கொண்டு விசேஷ நாட்களை நடாத்துவார்கள் சமீபத்தில் நிறுவப்பட்ட சமய வைபவச்சபையின் கூட்டத்திலே தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீமகா போதி விஹாரேயிலுள்ள கீழ்த்திசை நால்நிலைய மண்டபத்தில் விவசாய உதவி மந்திரியும் அனுராதபுரத்தொகுதிப்பிரதிநிதியுமான ஸ்ரீ. பி. பி. புலன்குலாமே திஸ்ஸாவே தலைமையிற் குறித்த கூட்டம் நடைபெற்றது.

இலங்கையின் சரித்திரத்தில் ஒரு உன்னத ஸ்தானத்தை அடையவிருக்கும்இவ்வைபவம் ஸ்ரீ. பண்டாரநாயகாவின் பிரயத்தனத்தால் நிறைவேறுகின்றதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## சாவகச்சேரி பட்டினசங்கம் இருவர் போட்டி

சாவகச்சேரி பட்டினசங்க அங்கத்தவர்கள் எண்மருள் வி. முத்துக்குமாருவும் திரு. எஸ், கே. இரவியநாயகமும் தலைவர் பதவிக்குப் போட்டியிட முன்வந்துள்ளனர் என அறியக்கிடக்கின்றது.

## பலாலி (கோப்பாய்) அரசினர் ஆண் ஆசிரியகலாசாலைப் பழைய மாணவர் சங்கம்

மேற்படி சங்க ஆலோசனைக் கூட்டம் சமீபத்திற் பலாலி அ. ஆ. ஆசிரியகலாசாலையில் திரு. சோ. நடராசா அவர்கள் தலைமையில் கூடிற்று. — நிருபர்


## ஸ்கந்தவரோதயக் கல்லூரி பிரவேச பரீட்சைகள்

மேற்படி பரீட்சைகள் 4-ம், 5-ம், 6-ம் (I Form), 7-ம் (II Form) வகுப்புகளில் சேர விரும்புவோருக்கு 12-1-49 காலை 9-30 மணிக்கு நடைபெறும். ஏனைய வகுப்புகளுக்கு 17-1-49ல் நடைபெறும். விரும்புவோர் 5-1-49க்கு முன் தங்கள் வயது, சித்தியடைந்த வகுப்பு, விலாசம் என்பனவற்றை எழுதி எனக்கு அனுப்புதல் வேண்டும். வகுப்புகளில் இடங்கள் மிகக் குறைவாக இருத்தலின் பிரவேச பரீட்சை எடுக்காதவர் பின் இடம் பெறமாட்டார்.

H. S. C. & 'Varsity Entrance Classes will be formed on 17-1-49. The following subjects will be taught:— Sanskrit, Tamil, Government, History, Economics, Geography, Pure Mathematics, Applied Mathematics, Chemistry, Physics, Botany, Zoology. Those who sat for the S. S. C. (English) 1948 Examination and expect to pass may also join. Applications for admission should reach me on or before 10-1-49.

15-12-48

சி. சுப்பிரமணியம்
தலைமை ஆசிரியர்

[3586]


## நாரந்தனை கணேச வித்தியாசாலை

சமீபத்தில் ஊர்காவற்றுறையைச் சார்ந்த நாரந்தனையில் மேற்படி வித்தியாசாலை மண்டபத்திற் பரிசளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. தலைமையாசிரியர் திரு. சி. மாணிக்கம் அவர்களால் வருடாந்த அறிக்கை வாசிக்கப்பட்டது. — நிருபர்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 3499

கந்தரோடை, நாகமுத்து அப்பாசசி
வழக்காளி

சுன்னாகம்,

1. சின்னக்குட்டி இளையதம்பி (மரணம்)
2. சின்னக்குட்டி பொன்னம்பலம் தானாகவும் காலஞ்சென்ற சின்னக்குட்டி இளையதம்பியின் ஆஸ்திக்கு பிரதிகாரியஸ்தராகவும்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 3499-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1949-ம் ஆண்டு ஜனவரி (தை) மாதம் 19-ந் திகதி (19-1-49) புதன் கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:—** முதல்வட்டி ரூபாய் 490-00ம், இதில் ரூபாய் 400-00க்கு 28-4-47 திகதி தொடக்கம் 2-8-48 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 187-45 சதம்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவிற் கோவிற்பற்று சுன்னாகமிறை "அம்புலியவளவு" நிலைப்பரப்பு ஐந்து (5-ம்) பனைகளும் கிழக்கு மேற்கு எல்லைகளில் நிற்கும் வேம்புகளிற் பங்கும். எல்லை: கிழக்கு, கந்தர் நாகலிங்கத்தின் ஆதனம். வடக்கு வல்லிபுரம், நாகலிங்கத்தின் ஆதனம். மேற்கு, சின்னத்தம்பர் சீனிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு, முத்தர் சின்னத்தம்பிக்கும் முருகேசு சின்னப்புவுக்கு முரிய ஆதனம். இதில் சொரியலாய் அரைவாசி($\frac{1}{2}$) முற்பதிவு H. $\frac{129}{83}$.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner &
Licensed Auctioneer

தெல்லிப்பழை
10-12-48. [3584]


## வந்தாறு மூலை மத்தியபாடசாலை

வந்தாறுமூலை அரசினர் மத்தியபாடசாலையிற் சமீபத்தில் மாணவ மாணவிகளின் ஆடல் பாடல்கள் நடைபெற்றன. செல்வி, ஆர். தவமணி தேவியின் இசைக்கச்சேரி சபையோரால் பாராட்டப்பட்டது. சங்கீத ஆசிரியர் மூ. சிவபால் என்பவர் பிள்ளைகளின் நிகழ்ச்சிகளிற் சிரத்தையெடுத்திருந்தார். பாடசாலை அதிபர் ஸ்ரீ ஏ. கே. சபாபதிப்பிள்ளை அவர்களின் ஊக்கமும் உற்சாகமும் குறிப்பிடத்தக்கது. — நிருபர்.

## பதுளை சைவபரிபாலனசங்கம் ஸ்ரீ ரமண ஜெயந்தி

மேற்படி ஜெயந்தி மேற்படி சங்க ஆதரவில் 25-12-48 சனிக்கிழமைமாலை சரஸ்வதிவித்தியாசாலை மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. 'ஆத்மஜோதி' ஆசிரியர் ஸ்ரீமான் கே. இராமச்சந்திரா, பண்டிதர் ஸ்ரீமான் என். முத்தையா ஆகியோர் ரிஷியின் வரலாற்றையும் பெருமையையும் விதந்து சொற்பொழிவாற்றினர். — நிருபர்.

## புத்தளம்: அர்ச். அந்திரேயார் ஆங்கில கல்லூரிப் பரிசளிப்பு விழா

மேற்படி கல்லூரியின் பரிசளிப்பு விழா சமீபத்தில் மேன்மை தங்கிய சலாப மேற்றிராணியாண்டவர்டொக்டர் எட்மன் பீரிஸ் ஓ. எம். ஐ. பி. ஏ. அவர்களின் தலைமையிற் சிறப்பாக நடந்தேறியது. கல்லூரி அதிபர் திரு. டபிள்யூ. ஏ. சி. ஐ. பர்னாந்து அவர்கள் தமது வருடாந்த அறிக்கையையும் சமர்ப்பித்திருந்தார்.

## வலிகாமம் வடக்கு-கிழக்கு சமூகசேவைச் சங்கம்

மேற்படி சங்கத்தின் வருடாந்த மகாநாடு சென்ற சனிக்கிழமை (1-1-49) நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்திற் சிறப்பாக நடைபெற்றது. பல பிரமுகர்கள் சொற்பொழிவுகள் ஆற்றினர்.


## தேவை

திறமைவாய்ந்த தமிழ், இங்கிலீஸ் கொம்போசிட்டர்களும், மெஷின் வேலை செய்யக்கூடிய தேர்ச்சியுள்ளவர்களும், பைண்டர்களும் தேவை. தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். நற்சாட்சிப் பத்திரங்களுடன் மனுச்செய்க.

மனேஜர்,
விவேகானந்த பிரெஸ்,
யாழ்ப்பாணம் (போன் 117)

[3585-ii]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மருமக்களே!**

வணக்கம். நத்தார் விடுமுறை எப்படியிருக்கிறது? இவ் விடுமுறையைக் கொண்டாடுவதற்கு மழை அதிகம் இடங் கொடுத்திருக்கமாட்டாது என்றே நம்புகிறேன். எங்கள் ஊரில் மழை சோவென்று கொட்டிக்கொண்டேயிருந்தது சென்ற சில நாட்களுக்கு. தயவுசெய்து எந்த ஊரென்றுமாத்திரம் கேட்காதீர்கள். எதற்காகத்தெரியுமா? சொல்லமாட்டேன்.

மருமக்களே நான் சென்ற பத்திரிகையில் எழுதிய வெகுவர்ணதரிசினியைச் செய்துபார்த்தீர்களா? என்ன விசித்திரமான நிறவர்ணங்களைப் பார்ப்பீர்கள் தெரியுமா? செய்து பார்க்காதுவிட்டால் இப்பொழுதாவது செய்து பாருங்கள்.

மேற்பிரிவு மருமக்களுக்கு ஒரு வார்த்தை. உங்களிற் சிலர் இனிப் பாலர்பகுதியில் அங்கத்தவர்களாக இருக்க முடியாது. ஏனெனில் வருஷமும் போகப்போக வயதும் கூடுகிறபடியால்தான். இதை நான் பாலர்பகுதியில் அறிவிப்பேன். ஆனால் இம்மருமக்கள் பாலர்பகுதிக்குக் கட்டுரைகள் எழுதியதுபோலவே கட்டுரைகள் எழுதி ஈழகேசரி ஆசிரியருக்கு அனுப்பலாம். நன்றாகவிருந்தால் கட்டாயம் பிரசுரம் பெறுந்தானே! வணக்கம்.

கேசரிமாமா

## மாமா பதில்

**த. வேலுப்பிள்ளை**, மே.157: மருமகள் சு. காந்திமதியின் கதை நன்றாக இருந்தபடியால்தான் பிரசுரம் பெற்றது. நீர் கூறியவாறு ஆரம்பம் நன்றாகத்தான இருந்தது. நீர் எழுதிய மற்றும் கேள்விகளுக்கு உமக்கு நேராகத் தபால் எழுதுவேன். பாவம் என்பது தீயசெயல். பாவம் என்பது தமிழ்ச் சொல்லல்ல. சமஸ்கிருதச் சொல்லு. அதை Bhāvam என்று உச்சரிக்க வேண்டும். அச்சொல்லு, தியானம், எண்ணம், அபிநயம் என்னும் பொருள்களைக் குறிக்கும்

**கா. வ. இராமச்சந்திரன்**, கி.227: உமது கட்டுரை கிடைத்தது.

**ஆ. கணபதிப்பிள்ளை**, மே.12: கட்டுரை எழுதி அடுத்தவாரம அனுப்பிவைப்பேன். கண்ணில் நோயிருந்தால் சீக்கிரதிற் தகுந்த வைத்தியரிடம் காண்பித்து சிகிச்சை பெறுவது நலம்.

**ச. சாரதாதேவி**, கி.125: நீர் எழுதியனுப்பிய புதினம் எங்கள் பத்திரிகையில் முன்னரே வெளிவந்துவிட்டது, மருமகளே.

**ச. கமலாவதி**, மே.123: உமது "நிலா உலாத்து" கிடைத்தது. அழகாக எழுதியிருக்கிறீர்.

**வ. இ. செல்லத்துரை**, மே.33. நீர் எழுதியனவெல்லாம் தவறு நான் அப்படி ஒருபொழுதும் எண்ணவில்லை. சீக்கிரத்திற் பிரசுரமாகும்.

**த. வேலுப்பிள்ளை**, மே.157: தமிழ்க் கதைகளெல்லாவற்றின் பொருள்கள் ஒன்றையொன்று தழுவித்தான் இருக்கும். அதனால் அச்சிறுகதை 'காப்பி' அடிக்கப்பட்டதென்று திடமாகச் சொல்ல முடியாது. உமது சிறு கட்டுரை கிடைத்தது.

**இ. பேரின்பநாயகம்**, மே.222: மருமகனே! நேரிற் கொண்டுவந்து எங்கள் கந்தோரிற் தபால்களைக் கொடுக்கலாம். அதனால் ஒரு தவறுங் கிடையாது. உமது கட்டுரையும், கவிதைகளும் கிடைத்தன

**லோ. ஜேம்ஸ்**, மே.216: எனக்காகவும், என் மருமக்களுக்காகவும் நோவனைத் திருநாளிலன்று கடவுளிடத்தில் மன்றாடியதற்காக என் வணக்கத்தை உமக்குச் செலுத்துகின்றேன். நத்தார்ப் பண்டிகையை எப்படிக் கொண்டாடினீர் என்றே ஒரு சிறு கட்டுரை எழுதலாமல்லவா! உமது கட்டுரை கிடைத்தது.

**அ. டே. குலராசா**, மே.38: நீர் பரீட்சையிற் சித்தியடைந்தது மிகவும் சந்தோஷம். உமதுகட்டுரைகள் கிடைத்தன.

**அ. ஜோ. ஜெயராஜா**, மே.245: உம்மை என் மருமகனுக்கியிருக்கின்றேன். உமது சிறு கவிதை நன்றாயிருக்கிறது.

**கா. வ. இராமச்சந்திரன்**, கி.227, உமது கட்டுரை கிடைத்தது.

**தி. பஞ்சாட்சரம்**, மே.95: மருமகனே! நான் உங்கள் ஒருவரையும் மறக்கவில்லை. சென்றவாரம் இடம் இல்லாதபடியால்தான் பதில்கள் எழுதமுடியவில்லை. நீர் எழுதிய கதைகளைப் பிரசுரிப்பேன். ஆனால் எப்போது என்றுதான் சொல்லமுடியாது.

**சி. இராசரத்தினம்**, மே.54: மருமகனே உமது இலக்கத்தைக்குறித்து அனுப்பவேண்டும். உமக்குத் தபால்மூலம் பதில் தேவையென்றால் முத்திரையொன்றையனுப்பிவைத்தல் நன்று.

**சா. சுப்பிரமணியம்**, கி.143: உமது கதை கிடைத்தது. மிகவும் நன்றாயிருக்கின்றது.

**வி. சுப்பிரமணியம்**, மே.80: உமது மூன்று கட்டுரைகளும் கிடைத்தன.

**லோ. ஜேம்ஸ்**, மே.216: நீர் அனுப்பிய நத்தார் வாழ்த்துப்படம் கிடைத்தது. நீர் எழுதியதை மற்றும் மருமக்களும் அறியும்வண்ணம் அதைக்கீழே கொடுக்கிறேன். "இம் மங்களகரமான நத்தார் வருஷத்தில் என் மாமாவும், மருமக்களும் அன்பும், அழகும், அருளும், ஆற்றலும் பெற்றுப் புதுப் பொலிவுடன் சோபிக்க ஆண்டவன் அருள் புரிவாராக!"

## பசி

**லோ. ஜேம்ஸ், மே.206.**

அவன் எத்தனைநாள் பட்டினியோ? எப்படித் தவித்தானோ? யாரார் வீட்டுவாசலிற்போய் நின்றானோ? எவ்வளவு பேர் "சனி" என்று விழுந்தார்களோ? எவ்வளவு பேர்உதாசீனமாய்ப்பேசி அடித்தார்களோ? ஒருவாய் சோறு ஒரே ஒரு கவளம் கிடைக்காமல், அலைந்து அலைந்து கால் ஓய்ந்து, காதடைத்து; கண் இருண்டு; போயிருப்பான்.

ஆ! பசி! சீ! மனித வாழ்க்கை இவ்வளவு தானா? மனிதனுடைய உன்னதமான வேதாந்த மெங்கே, சாஸ்திரங்கள் எங்கே, கலைகள் எங்கே? எல்லாம் ஒரு கவளசோற்றுக்குப் பின்னால் தானே. இல்லை என்று விந்தாரம் பேசலாம். இதோபாருங்கள்:—

ஒருநாள் வீட்டிலே எனக்கு என் தந்தையுடன் சிறிய கோபம் மூண்டது. அன்றையிட்டு காலைதொட்டு மாலைவரையும் பட்டினி. வீம்பும் வலுத்தது. கண்டிப்பாய் உணவு உண்ண மறுத்துவிட்டேன். மாலைநேரமானது. இரவின் மௌன இருள் சூழ்ந்தது. விளக்கு அணைக்கப்பட்டது. அனைவரும் தூங்கி விட்டார்கள். எனக்கு மட்டும் தூக்கம் வரவில்லை.

வயிறு கிள்ளுகிறது; உடல் சோர்கிறது; மனம் சுழல்கிறது. புரண்டு புரண்டு படுத்தேன். எத்தனை புரண்டாலும் பசி தீருமா? எழுந்து செம்பு செம்பாய்த் தண்ணீர் குடித்தேன். ஐயோ! பசியே தீரவில்லை. என்னயோசனை? நாள்தோறும், படுக்கையிலே என்னென்ன சிந்தனையெல்லாம் எனக்கு எழும்? என் கிதை எங்கே, என் சினேகிதர் எங்கே, மற்ற இன்பமான நினைவுகள் எல்லாம் எங்கே? சுகமான தூக்கந்தான் எங்கே? ஒன்றுமில்லை. ஒரே நினைவு—பசி. இரவெல்லாம் ஒரேபசிதான்! உலகமே ஒரு வனாந்தரமாகிவிட்டது.

பொழுது விடிந்தது. பல்லை விளக்கினேன். விளக்கியபின் யார் உபசாரத்தையும் எதிர்பாராமல் உணவு உட்கொள்ள உட்கார்ந்து விட்டேன். வயிறு முட்டச் சாப்பிட்டேன். பசி தீர்ந்ததும் உலகமே ஆனந்தத்தாண்டவம் புரிந்தது. ஒரு கவளச் சோறு உலகம் முழுவதுக்குமே பொருள் கொடுத்து விட்டது. "தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில், ஜகத்தினை அழித்திடுவோம்" என்று பாரதி கூறினார். "பசியால் வாடும் மனிதனுக்கு முன்னே, சோற்று உருவிலன்றி வேறெவ் [illegible] [illegible] என்று மகாத்மாகாந்தி கூறுகிறார்.

## பிறந்ததின வாழ்த்துக்கள்

**[ 2-1-49—8-1-49 ]**

கி. 53: செ. மகேஸ்வரன்; கி. 166: சா. விஜயராசா; மே. 187. க. சோமசுந்தரம்; மே. 188. து. மகாலிங்கம்; மே. 218 த. நாகலிங்கம்; மே. 236. மொ. ஸலீம்.

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக.

## ஊக்கமது கைவிடேல்

**இ. பேரின்பநாயகம் மே.222**

"ஊக்கமது கைவிடேல்", என்ற வசனத்தின் அர்த்தம் யாது? நாம் எவ்வித முயற்சியிலும் ஊக்கத்தைக் கைவிடப்படாது என்பதேயாகும். இது யாருடைய வாக்கு? இவ்வாக்கியம் ஔவைப் பிராட்டியாரால் மொழியப்பெற்றது. ஆனால் இக்காலத்தில், வாலிபர்கள் என்ன கருத்துடன் இவ்வாக்கியத்தை அமைத்துக் கொண்டார்கள்? "ஊக்கத்தைத் தருகின்ற கள்ளைக் கைவிடாதே", என்பதே இப்பொழுது அமைத்துள்ள பொருளாகும். இவ்விதமாக இவர்கள் ஒவ்வொன்றையும் வேறுவிதமாக பொருட்படுத்தி மிகவும் மூடத்தனமான முறையில் வதிந்துகொண்டார்கள். ஆனால் இக்கருத்து முற்றும் பிழையான முறையில் அமைக்கப் பெற்றது என்று நாம் கூறுவது மிகையாகாது. ஏனெனில்நாம் மதுவை அருந்தினால் அது நமக்கு ஊக்கத்தை அளிக்கின்றதா? அன்றேல் மயக்கத்தைத் தருகின்றதா?

கள்ளை நாம் அருந்தினால் அன்னைபோல மனிதருக்குச் சள்ளை கொடுக்க நேரிடும். அதுவுமன்றி உற்சாகமில்லாமல் மயங்கி விழநேரிடும். இது தானா ஊக்கம்? இது ஊக்கத்தை அளிக்குமென்றால் செய்யும் வேலைகளைச் செவ்வனே செய்யலாந்தானே.

பிழைப்பென வதிந்தால் உழைப்பு மிக நிலைத்தல், பழையரைத் தொலைத்துப் பிழைப்பதற்கு வழிகொடுத்து உழைப்பு மிகக் காட்டுதல், உலப்பென வந்திடினும், நலப்பென போந்திடினும், கலப்புமனங்கொளா கலக்கமதை விலத்தல், இவைகள் யாவும் ஊக்கமெனப்படும். நேசம்வைத்த,நீசம்எண்ணாது மோசஞ் செய்யாது, வாசஞ் செய்தல் வேண்டும். மாசலங்களை நினைந்து வருந்தாமலும், பேசலங்களை விரட்டி வருத்தாமலும் வாழ வேண்டும்.

தகையுடைய விரும்பின் பகையை விலத்தேல் மிகையது வரும். மிகையதைக் கொள்ளாவகையதைத் தேடு. வகையது வந்திடின் நகையது வந்திடும். வந்திடின் ஊக்கம் புந்தியில் விடேல் விடில் சிந்தை நொடியில் தங்கிடும் தந்திடின் தகையது வந்தையில் வந்திடுமோ? இல்லை. ஆதலால் இவற்றைப் பொருள்படுத்தில் செவ்வனே செய்து முடிக்கும் ஆற்றல் வேண்டும். இவ்வித ஆற்றலே ஔவையார் கூறிய ஊக்கமெனப்படும்.

ஆதலால் எவ்வித பேதங்கள் வந்தாலும் செய்யும் முயற்சிகளெல்லாம் ஊக்கமாகச் செய்தல் வேண்டும். ஊக்கமாக நடத்தி வந்தால் ஆக்கம் வந்து சேரும். அத்துடன் நோக்கமும் சிறந்து கண்ணும். இந்தஊக்கத்தினால்வரும் நன்மைகளை நாம் சிறிது ஆராய்ந்து கொள்ள முடியாதா? ஊக்கமொன்றேஆக்கம்விளைக்கும்

## செய்ந்நன்றி மறவாமை

**இ. மகேஸ்வரசர்மா கி.164**

நமது முன்னோர் ஒருவர் செய்த அற்ப நன்றியையும் பெரியதாய் ஏற்றுக்கொண்டு தம் ஆயுள் பரியந்தம் அந்நன்றியை மறவாது வந்ததாக நம் சரித்திரங்களால் நன்கு விளங்குகிறது. இதற்கு உதாரணமாய் ஒரு சிறிய உபமானம் சொல்லுகிறேன். சாதாரணமாக நாம் அற்பமானதாக நினைக்கின்ற காகம் விடியற்காலையில் எழுந்திருந்து "கர்மானுஷ்டானங்களைச் செய்ய இதுவே சமயம், எழுந்திருங்கள்; சோம்பலாக நித்திரையிற் காலம் கழிக்க வேண்டாம். உத்தமமான காலத்தை வீணிற் கழித்து விட்டால் அன்று முழுதும் சோம்பலாகவே முடியும்: ஆதலால் சரீரசுகத்துக்கும் மன நிம்மதிக்கும் பொருந்திய விடியற் காலத்தில் எழுந்திருங்கள். சூரியோதயத்துக்கு முன் ஸ்நானபானங்களை முடித்து செபதபங்களைச் செய்யுங்கள். இதனால் உங்கள் ஆயுள் விருத்தியாகும்" என்று நமக்கு அறிவுறுத்துகிறது. காகம் அதிகாலையிலெழுந்திருந்து சுத்தமான காற்றை சுவாசிப்பதால் நீண்டகாலம் ஆயுளுடையது. இவ்வாறு காகங்கள் எமக்கு நன்மை செய்வதால் அதை மறவாது சாப்பிடும்பொழுது உணவிடுவது நமது தேசத்தில் நடந்து வருகிறது.

## இளங்கோவும் சகோதரரும்

**கு, விஸ்வேஸ்வரன். கி.36.**

இளங்கோ மிகச் சிறந்த ஓர் புலவர். அவர் சிலப்பதிகாரம் என்ற நூலை இயற்றி இருக்கிறார்.

'யாமறிந்த புலவரிலே
கம்பனைப்போல் வள்ளுவர்போல்
இளங்கோவைப்போல் பூமிதனில்
யாங்கணுமே பிறந்ததில்லை."

என்று பாரதியார் பாடியிருக்கிறார்.

அந்தப் பெரும்புலவர் கல்வி அறிவோடு நற்குணமும் உடையவர். அவர் தகப்பன் சேரநாட்டுக்கு அரசனான நெடுஞ்சேரலாதன். ஒருநாள் அரசன் சபையில் இளங்கோவும் தமையன் செங்குட்டுவனும் இருக்கும்போது ஒரு சோதிடன் வந்தான். இராசகுமாரர்கள் இருவரையும் பார்த்துவிட்டு இளங்கோ ஓர் பெரிய அரசனாக வருவான் என்று சொன்னான். எல்லாரும் ஆச்சரியம் அடைந்தனர். இளங்கோ, தமையன் இருக்கத் தம்பி அரசாள்வது சரியா? நான் அப்படி ஒருபோதும் செய்யமாட்டேன். இப்போது துறவியாகி விடுகிறேன் என்று கூறித் துறவியானார். எல்லாரும் இளங்கோவின் சகோதர அன்பைப் பாராட்டினர். பின்பு செங்குட்டுவன் அரசனானபோது அவன் சபையில் இளங்கோ புலவராகவிருந்தார்.

## ஈழகேசரி — பாலர் பகுதி

முழுப்பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

..............................

பிறந்த திகதி: ..............................

..............................

தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழர் இசைக்கலை

சமீபத்திற் சென்னைமாநகரிலே தமிழ் இசை இயக்கத்தின் ஆருவது ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. மாகாணப்பிரதமர் ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் விழாவைத் திறந்துவைத்துத் தமிழ்இசைக்கலையின் சிறப்பைப்பற்றிஅழகாகப்பேசினுர். அதில் ஒருபகுதி வருமாறு:

பழந்தமிழ்க் கலைகளாம் பாடலும் ஆடலும் பற்பல காரணங்களால் இடைக்காலத்து மங்கலாயின; வேற்றுருப் பெறலாயின. தமிழ்ப்பண்கள் பல ,வடமொழிப் பெயர்களைத் தாங்கிக் கர்னாடக சங்கீதத்தின் பகுதியாயின. சீராகம், வராடி தனுசி, தேசாக்கிரி; சுருதி; காந்தாரம், மேகராகக்குறிஞ்சி, குச்சரி, நட்டகம், கொண்டைக்கிரி முதலிய பண்கள் முறையே ஸ்ரீராகம், வராடிகா, தன்யாசி, தேசாக்ஷி, தேவகாந்தாரம், மேகரஞ்சி, குர்ஜரி, நாடராகம், குண்டக்கிரி என வழங்கி வருவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறுர்கள்.

## பிற்கால இசை வளர்ச்சி

சிலப்பதிகார வரிப் பாடல்களும் தெய்வ மணக்கும் தேவாரமும் தேனினுமினிய ஆழ்வாராதிகளின் பிரபந்தங்களும் தமிழிசையின் அடிப்படையாம். அதன் மீது அருணகிரியார் தாயுமானவர் முத்துத்தாண்டவர் அருணுசலக் கவிராயர் அண்ணுமலை ரெட்டியார், கோபாலகிருஷ்ண பாரதி கவிகுஞ்சரம் ஐயர் மசாமி ஐயர், வேதநாயக சாஸ்திரியார், வேதநாயகம் பிள்ளை முதலிய தெய்வ இசைத் தச்சர் அழகுறத் தமிழிசை அரண்மனையை ஆக்கிஅளித்தனர். வடலூர் வள்ளலாரும் பைந் தமிழ்க்கவிஞன் பாரதியும் கவிதையாகிய ஓவியத்தை வரைந்து மணி மண்டபத்தை அழகுபடுத்தினர். தற்காலத்தும் இசைச்செல்வர் இலக்குமணப்பிள்ளை புத்தேரி கவிமணி நாமக்கல் கவிஞர், புதுவை புரட்சிக் கவிஞன் பாரதி தாசன் தவஞானச் செல்வர் சுத்தானந்த பாரதி ஆகியோர் அழகுபடுத்தி வருகின்றனர்.

## இசை ஆராய்ச்சி

தமிழ்ச் சாகித்தியத்தில் கர்நாடக முறையிலோ, இந்துஸ்தானி முறையிலோ கீர்த்தனங்கள் வண்ணங்கள் அமைத்துக் கச்சேரிகள் செய்து விட்டால் மட்டும் தமிழிசையைப் பேணியது ஆகாது. பழைய தமிழ்ப்பண்கள் எவ்வாறிருந்தன; பழைய இசைக் கருவிகள் எங்ஙனமாய் இருந்தன; பழைய ஆடல் மரபுகள் எத்தகைய பாணியிலிருந்தன என்பனவற்றை கண்டு மீண்டும் அவற்றை மலரச் செய்யவேண்டும். இதற்கு ஆராய்ச்சி வேண்டும். கருணுமிர்த சாகரம் கண்ட ஆபிரகாம் பண்டிதரும் யாழ்நூல் யாத்த விபுலானந்தரும் இசையியல் இயற்றிய பொன்னையா பிள்ளையும் இந்த ஆராய்ச்சிக்கு வழிகாட்டிப்போயினர். அவர்கள் காட்டிய நெறியில் சென்று தமிழிசைக்கலை புத்துயிர் பெறுவதற்கு வேண்டிய ஆராய்ச்சிக்கழகம் அமைய வேண்டும்.

## நாட்டுப் பாடல்கள்

தமிழிசையின் மற்ருெரு முக்கிய உறுப்பு நாட்டுப் பாடல்களாகும். இந்த நாட்டுப் பாடல்கள் நவரசங்களையும் எழுப்பி எல்லோர் வாழ்க்கையையும் வளம்பெறச் செய்ய வல்லன. ஆனுல் அவற்றைப் பாமரர் பாடலெனப் பண்டிதர் ஒதுக்கியதால் தமிழிசை விரிந்த வளர்ச்சி பெறவில்லை. கவிஞர் தாகூர் நாட்டுப் பாடல்களை மீண்டும் உயர்ப்பித்தார் தமிழ் நாட்டில் பாரதியார் அதற்குப் புத்துயிரளித்தார். புதிய கருத்துக்களைப் பழைய நாடோடி மெட்டுகளில் புகுத்தி அறிவும் இன்பமும் வளரச் செய்ய வேண்டும்.

## ஓசை இன்பம்

மற்றுமொரு விஷயம் கூற விரும்புகிறேன். கர்நாடக இந்துஸ்தானி உட்பட்ட இந்தியச் சங்கீதத்தில் பல கருவிகள் வாசிக்கப்படுகின்றன. கச்சேரி நடக்கையில் அவை தனித் தனி ஓசையின்பம் தருகின்றனவேயன்றி அனைத்துங் கூடி ஒருமையின்பம் தருவதில்லை என்று நமது கச்சேரிகளைக்கேட்ட மேலைநாட்டு இசைக்கலைஞர்கள் கூறுகிறுர்கள். இந்தக்கருத்தைத் தழுவவோ மறுக்கவோ இசைப் பண்டிதர்களே தகுந்தவர்கள். ஆனுல் ஒன்றுமட்டும் நான் கூறுவேன். பழந்தமிழர்கண்ட இசை விருந்தில் ஓசையின்பம் பொருளின்பம் ஒருமையின்பம் எல்லாம் முரணின்றி ஒன்ருய் இருந்தன. சிலப்பதிகாரத்தில் "பாடிய வாரத்து ஈற்றினின்றிசைக்கும் கூடிய குயிலுவக் கருவிகளெல்லாம் குழல்வழி நின்றது யாழே; யாழ்வழித்தண் ணுமைநின்றது தகவே; தண்ணுமை பின்வழி நின்றது முழவே; முழவொடு கூடி நின்றிசைத்த தாமந்திரிகை" எனக் கூறப்பட்டிருக்கிறது.

## இயற்கை

இசைக் கருவிகளோடன்றியும் இயற்கையோடும் ஒன்றி நின்றது தமிழிசை. மேலைநாட்டில் மேம்பாடுற்று விளங்கிய வாக்னர் என்னும் இசை வல்லார் இயற்கையை இசைமயமாகக் கண்டனர். மேகத்திடை தோன்றும் இடியையும் தன்னிசையில் காட்டினுர்.

## கலைத் தேன் திரட்டல்

கலை வளர்க்க முன் வருவோர்க்கு ஒன்று கூற விரும்புகிறேன். கலை கட்டல் போல் பரந்தது; வேற்றுமை அறியாதது; ஒற்றுமை ஒன்றே அறிவது. குறுகியநோக்கமும் இகலிய மனப்பான்மையுமின்றிக் கலையுலகில் வேலை செய்ய வேண்டும். இந்துஸ்தானி கர்நாடகம் ஆகிய இரண்டுக்கும் காலத்தால் முற்பட்டது தமிழிசை. முற்பட்டதாயினும் அடிப்படையில் இம்மூன்றுக்கும் ஒற்றுமை உண்டு. ஒரேசெடியில் மலரும் மூவகை வண்ண மலர்களென்றுசொல்லலாம். ஒரே தாய் வயிற்றிற் பிறந்த மூன்று குழந்தைகளென்றுங் கூறலாம வளர்ச்சியில் பழக்க வழக்கங்களில் நடையுடை பாவனைகளில் வேற்றுமை காணப்படினும் இம்மூன்றுக்கும் குடி ஒன்றே; பிறப்பொன்றே; இயல்பொன்றே; பல மலர்களிலிருந்து மதுவைச் சேர்க்கும் வண்டுகள் போல இசைவளங்களை எத்திக்கும் சென்று சேர்த்துத் தமிழிசைச் செல்வத்தை வளர்க்க வேண்டும்.




# பிரிட்டன் பொது உறவு மகாநாடு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரித்தானிய அரசன் எவனுவது கடல் கடந்து சென்று வேருெரு அரசனை வென்று தன் ஆளுகைக்குக் கீழ்க் கொண்டுவரும்படி படை அனுப்பியது கிடையாது. 16-ம் நூற்றுண்டில் இங்கிலாந்தில் உள்நாட்டுக் கலகமாயிருந்தது. சமயப் பூசல்களினுலும் அரசர்களின் தவறுகளினுலும் அமைதியான வாழ்விற்கு அங்கே இடமில்லாதிருந்தது. அன்றியும் பிரிட்டனின் சனத்தொகையும் அதிகரித்தது. போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் அந்நாளில் கீழைத் தேசங்களில் வியாபாரஞ்செய்து செல்வ மீட்டினுர்கள். இவர்களைப் பின்பற்றி ஆங்கிலேயரும் வியாபாரச் சங்கங்களை ஸ்தாபித்துக்கொண்டு பல இடங்களிலும் வியாபாரத்தை ஆரம்பித்தார்கள். இவ்வாறு இவ்விரு நோக்கங்களின் விளைவாகப் பிரித்தானியர் பல இடங்களிற் பிரவேசித்தனர். அவர்கள் குடியிருப்பதற்குக் குளிர்ந்த பிரதேசமே ஏற்றது. எனவே அமெரிக்கா, அவுஸ்திரேலியா, தென்னுபிரிக்கா, நியூசிலந்து முதலிய இடங்களிலும் குடியேறினர். வர்த்தகஞ் செய்வதற்காக இந்தியாவினுள்ளும் புகுந்தனர்.

17-ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகசங்கம் இந்தியாவில் வியாபாரஞ் செய்ய ஆரம்பித்தது. அவர்களைத் தொடர்ந்து மிஷனரிகள் "அஞ்ஞானிகளை" ஞானிகளாக்க வந்தார்கள். வியாபாரத்தில் ஆங்கிலேயருக்கும் பிரான்சுக்காரர்களுக்கும் போட்டி ஏற்பட்டது. 1640-ல் [illegible] கைப்பற்றப்பட்டது. 1690-ல் கல்கத்தாவும் அவர்களால் கைப்பற்றப்பட்டது. போர்த்துக்கேய இராசகுமாரியை 2-ம் சாள்ஸ் விவாகஞ் செய்ததற்காகப் பம்பாய் சாள்சுக்குச் சீதனமாயளிக்கப்பட்டது. இவ்வாறு 1858 வரை கிழக்கிந்திய வர்த்தகசங்கம் இந்தியாவின் பெரும்பாகத்தை யாண்டது. அதே ஆண்டில் பிரித்தானிய பாராளுமன்றம் இந்தியாவின் விஷயத்தில் தலையிட்டு இந்தியாவைத் தக்க முறையில் ஆளுவதற்கு ஒரு சட்டத்தை உண்டாக்கியது. இதுவரை வியாபாரத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து அரசாண்ட கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் ஆளுகையினின்றும் இந்தியா பிரித்தானிய மன்னரதும் பாராளுமன்றத்தினதும் ஆளுகையின் கீழ் வந்தது. இது ஒரு பிரதான சம்பவம். ஏனெனனில் இப்பொழுதுதான் "பராதீன நாடுகள் எல்லாம் நம்பிக்கைப்பொருள்கள்" (Principles of trusteeship) என்ற சித்தாந்தம் சிருஷ்டிக்கப் பட்டது. அதாவது, பராதீன நாடுகள் எல்லாம் தங்களை ஆளுதற்கான பக்குவநிலை யடையும் வரையும் அவைகள் இங்கிலாந்தின் மன்னனுலும் பாராளுமன்றத்தாலும் ஆளப்பட வேண்டுமென்றும் அப்பால் அவைக்குச் சுய ஆட்சி அளிக்கப்படவேண்டுமென்றும் ஓர் கொள்கை ஏற்பட்டது. இந்தக் கொள்கையின் பலனுகத்தான் பல டொமினியன்களுமேற்பட்டன.

## பிரிட்டன் செல்வம்

இந்தியாவின் நிலைமை இவ்வாறிருக்க, பிரித்தானிய கிழக்கிந்திய சங்கம்போல் வேறு வர்த்தக சங்கங்கள் வேறிடங்களில்—பிரித்தானிய கிழக்காபிரிக்க வர்த்தகசங்கம் கிழக்காபிரிக்காவிலும், ரூயல் நைகர்சங்கம் நைஜீரியாவிலும் ரூயல் ஆபிரிக்க வர்த்தகசங்கம் ரூடீஷியாவிலும் ஆளுகைக்கு வழியிட்டன. இலங்கை 1802 ல் குடியேற்ற நாடாய் வந்தது.

குடியேற்றநாடுகள் பிரிட்டனுக்குப் பெரும் செல்வத்தை அளித்தன. பிரித்தானிய முதலாளி வர்க்கத்தார் வியாபாரங்களிலும், தேயிலை, இறப்பர், கோப்பி முதலியவற்றைப் பயிரிடுதலிலும் பெரும் பணத்தை யீட்டினர். சுதேசிகள் இவற்றில் வேலைக்கமர்ந்தனர். ஆங்கிலக் கல்விகற்றவர்கள் பிரித்தானிய அரசியல் முறைகளையும் பயின்றனர். தாங்கள் எவ்வளவுக்குப் பிரித்தானியரால் சுரண்டப்படுகின்ருர்களென்பதை உணர்ந்தார்கள். அரசியல் சுதந்திரமின்றிப் பொருளாதாரச் சுதந்திரங் கிட்டாதென்ற முடிவுக்கு வந்தார்கள். எனவே, காலத்துக்குக்காலம் தங்களுக்குக் கூடிய அதிகாரம் அளிக்கும்படி வேண்டினுர்கள்.

இஃதிவ்வாறிருக்க, பிரிட்டனின் மண்ணுசையைப்பார்த்து மற்ற வல்லரசுகளும் அதன் வழியைப் பின்பற்றின. ஹிட்லரும் முசோலினியும் யப்பானும் புறப்பட்டன. இதனுலும் குடியேற்ற நாடுகளைப் பாதுகாப்பது ஒரு கஷ்டமான காரியமாக ஏற்பட்டது. எனவே பிரிட்டன் ஆக்கிரமிப்புக் கொள்கையை விடுத்து "நீங்கள் இப்பொழுது உங்களை ஆளக்கூடிய நிலைக்கு வந்துவிட்டீர்கள். எனவே நாங்கள் இனிமேல் சகோதரர்களாயிருப்போம்" என்ருெரு புதிய வழியைக் கண்டுபிடித்தது. இந்தச் சகோதர நாடுகளைத்தான் இப்போது பிரித்தானிய பொது உறவு நாடுகள் என்கின்ருேம்: இந்த உறவு டொமினியன்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் விளைவாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விஜய குமாரன்

இலங்கையர்கோன்

காட்சி 24

இடம்: வஸந்தமண்டபம்.
நேரம்: மாலை.

[மங்கலான தீப ஒளியில் விஜயனும் கருணமித்தனும் பாண்டுதேவனும் உட்கார்ந்திருக்கின்றனர்.]

**பாண்டு:** விஜய, காலையில் முடிசூட்டு வைபவத்தின் பிறகு நீ பேசிய பேச்சில் தேங்கி நின்ற சோகத்தைக் கண்டு நான் அயர்ந்துபோய் விட்டேன். கண்ணீர் விட்டு அழுது விடுவாயோ என்று கூட ஒருகணம் அஞ்சினேன். பாண்டிய வம்சத்துக் கன்னியைப் பட்டத்து இராணியாக அடைந்ததில் இருக்க வேண்டிய மகிழ்ச்சி சிறிதும் இருக்கவில்லையே......

**விஜய:** மகிழ்ச்சியா?

**பாண்டு:** இந்த வயதில் ஒரு தூய அரச வம்சத்து இளம் குமரியை மனைவியாக அடைவது மகிழ்ச்சிக்குரியதல்லவா?

**விஜய:** ம் ம் (பெருமூச்செறிந்து) ஆயிரம் கன்னிகள் மனைவியாக வந்தாலும் ......நடந்தது நடந்துபோய் விட்டது. இனிப் பேசிப் பயன் என்ன? நான் இனி வெறும் நடைப்பிணம்—ஹா, ஹ, ஹா—துறவியாகப் போய்விடுவதற்கு ஏற்ற மனக்கசப்பை என்னுள் அடக்கி வைத்திருக்கிறேன். சிலவேளை ஒரு இரவு எல்லாவற்றையும் தூர எறிந்துவிட்டுக் காட்டை நோக்கிக் கிளம்பினாலும் கிளம்பி விடுவேன் ...அப்பொழுது யாரைச் சிம்மாசனத்தில் ஏற்றி வைக்கப் போகிறாய்—கருணா?

**கருண:** இப்படி குத்தலாகப் பேசி ஒரு பயனும் இல்லை. ஏனெனில் நான் ஒன்றையும் பொருட்படுத்தப்போவதில்லை. ஆனால் நீ துறவியாக மாட்டாய் என்பதுமட்டும் நிச்சயம். உன் தேசாபிமானம் அளவு கடந்தது...

**விஜய:** அது எப்படியோ. ஆனால் மற்றவர்கள் இஷ்டத்திற்கும், லட்சியம் நம்பிக்கை மரபு முதலியவற்றிற்கும் கட்டுப்பட்டுச் சில கருமங்களில் நான் விட்டுக் கொடுக்கலாம். குதிரையைக் கட்டிக் குளக்கரைக்குக் கொண்டுவந்து விடுவது சுலபமாக இருந்தாலும் அதைத் தண்ணீர் குடிக்கச்செய்வது அவ்வளவு சுலபமல்ல...

**பாண்டு:** நீ சொல்வது ஒன்றுமே புரியவில்லை.

**விஜய:** உனக்குப் புரியாது. கருணனுக்கு ஒருவேளை புரியும்......அது சரி, அபயன் எங்கே?

**பாண்டு:** நானும்தான் அவனைத் தேடினேன். எங்கே போனானோ...

[மண்டபத்தின் வாசலில் சிலம்புகளின் ஒலி கேட்கிறது.]

**கருண:** விஜயனின் இஷ்டதெய்வம் வருகிறது. நமக்கு இனி இங்கு என்னடா வேலை? பாண்டு வா போகலாம்...

[பாண்டுதேவனும் கருணமித்தனும் எழுந்து நிற்கின்றனர்.]

**விஜய:** [பெருமூச்செறிந்து] சரி போங்கள்—போங்கள்...

**கருண:** புது மோகத்தில் எல்லாவற்றையும் மறந்துவிடப் போகிறாய்—கவனம்.

[இருவரும் போகிறார்கள். அவர்கள் மறைந்தவுடன் இரு பணிப்பெண்கள் பழவர்க்கங்கள் வாசனைத் திரவியங்கள் முதலியன ஏந்திச்செல்லப் பாண்டிய குமாரி சர்வாலங்கிர்த பூஷிதையாய் வஸந்த மண்டபத்தினுள் நுழைகிறாள். பணிப்பெண்கள் தாங்கள் கொண்டு வந்தவைகளை ஒரு மேசைமேல் வைத்துவிட்டு வெளியே போகின்றனர். விஜயன் பாண்டிய குமாரி வந்ததையே அறியாதவன்போல் சாளரத்தருகில்நின்று வெளியே பார்க்கிறான். பாண்டிய குமாரி மஞ்சத்தருகில் நிற்கிறாள் பிறகு தயங்கித் தயங்கி விஜயன் அருகில் போகிறாள்.]

**சரித்திர நாடகம்**

**பா. குமாரி:** நாதா!

**விஜய:** [திடுக்கிட்டவன்போல் திரும்பி] ஆ! ஏதோ சிந்தனையில் இருந்து விட்டேன். என்னை மன்னிக்க வேண்டும். கால் கடுக்க நிற்கின்றனையே. இப்படி அமரவேண்டும்.

**பா. கு:** தாங்கள் மட்டும் நிற்கலாமோ. இதோ சந்தனம், சவ்வாது...

**விஜய:** இவையெல்லாம் எனக்கு எதற்கு? இவைகளை அனுபவிப்பதற்கு இளமை வேண்டுமே...உன்போல்...

**பா. கு:** தாங்கள் வயோதிபர் அல்லவே...

**விஜய:** வயோதிபன்தான்—மனதில்!

**பா. கு:** ஏன் அப்படி விரக்தியாகப் பேசுகிறீர்கள்? நாதா, நான் அழகாக இல்லையா? தங்கள் வீர பராக்கிரமங்களைக் கேள்வியுற்றுத் தங்கள்மேற் காதல்கொண்டு கடல் தாண்டி வந்தேனே....

**விஜய:** காதல்...காதல்! இந்த வயோதிபன் மேலா? ஆனால் உண்மைக்காதல் ஒரு தலையானதல்லவே. உன்னை ஒரு சகோதரி என்றே என்னால் நினைக்க முடிகிறது.

**பா. கு:** தங்கள் இருதயத்தில் வேறு யாருக்காவது...

**விஜய:** அது எல்லாம் பழைய கதை...என் மனதில் இன்ப உணர்ச்சி என்பதே இல்லாமற் போய்விட்டது. அதுதான் சொன்னேன் வயோதிபம் என்று.

**பா. கு:** ஆனால் தங்களுக்குப்பின் அரியணை ஏறுவதற்கு...

**விஜய:** என் மரபில் வந்த அரசிளங்குமரன்! அதைப்பற்றிக்கூட எனக்கு இப்பொழுது கவலையில்லை. எனக்குப் பிறகு என் தம்பி இருக்கிறான்...... ஆனால்நீ என்பட்டத்து இராணியல்லவோ? இப்பரந்த இராஜ்யம்முழுவதற்குமே இராணி. என் இருதயம் ஒன்றைவிட மற்றெல்லாவற்றிற்கும் நீ இராணி. உன் சித்தப்படி எலரும் நடக்கக் காத்திருக்கிறார்கள். காதல் கலப்பில்லாத என் அன்பும் உனக்குப் பூரணமாக உண்டு...

**பா. கு:** [கண்ணீர்சோர] இதற்குத்தானா...

**விஜய:** நானும் இத்தேச மக்களும் உன் தாஸானுதாஸர்கள். உன் வேண்டுகோள் தேவ ஆணை. நீ தனி அரசு செலுத்த வேண்டுமென்றாலும் அதற்கும் நான் சித்தமாக இருக்கிறேன். அல்லது இப்படியே பாண்டியநாட்டுக்குத் திரும்பிப் போகவேண்டுமென்றாலும்...

**பா. கு:** என்ன சொன்னீர்கள்...? வீரத் தமிழ் மாறன் மரபில் உதித்த பெண்கள் முன்வைத்த காலைப் பின் வைப்பதில்லை. தங்கள் சித்தம் எதுவோ அது என் பாக்யம். [அழுகிறாள்] இனி நான் உங்கள் சகோதரி...

**விஜய:** ஆ! இப்பொழுது தான் இராணிபோல் பேசுகிறாய்...

—திரை—


முற்றும்.

### நாடக பாத்திரங்கள்

சிங்கபாகு — சிங்கபுரியின் அரசன்
அரசி
விஜயன்—சிங்கபாகுவின் மகன்; பட்டத்து இளவரசன்
அபயவாஸன், பாண்டுதேவன், கருணமித்தன் } விஜயனுடைய நண்பர்கள்
வாஸன் — விதூஷகன்
சுமித்தன் — விஜயனுடைய தம்பி
ரஞ்சிதா — ஒரு கணிகை
குவனா — இயக்க அரசி
ஒரு யக்க தலைவன்
பாண்டியன் மகள்
போர்வீரர்கள், பணிப்பெண்கள், விவசாயிகள், யக்கர்கள் முதலியோர்.

நாடக களம்: கூர்ஜரத்தில் உள்ள சிங்கபுரியும் இலங்கையும்.

காலம்: கி. மு. 5-ம் நூற்றாண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The
# EELAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
LARGEST CIRCULATION IN CEYLON, INDIA & MALAYAN UNION

Vol. 19 | Chunnakam, Sunday, Jan. 2, 1949 | No. 23

## அன்னை சாரதாதேவி

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பதைச் சிறுமி அறியாள். நித்திரையாயிருக்கும் பொழுது அவற்றைக் கதாதார் கழற்றி யெடுத்துவிட்டதை யறிந்த குழந்தை அழ ஆரம்பித்துவிட்டது. மாமியார் அவளைப்பார்த்து "எனது அன்பே! கதாதரன் உனக்குச் சிறந்த அணிகலன்களைச் செய்து கொடுப்பான்" என்று அவளைத் தேற்றினாள். சாரதாவின் மாமனார், அணிகலன்களைக் கழற்றியெடுத்தபடியால் கோபங்கொண்டு, மருமகளை வீட்டுக்கு அழைத்துப்போய் விட்டார். கதாதரரின் தாய் துக்கப்பட்டாள். அவளைப் பார்த்து "அம்மா! நீங்கள் எதற்காக மனம் வருந்தவேண்டும். அவர்கள் எதுசெய்த போதிலும் விவாகத்தைமட்டும் அவர்களால் தடைசெய்ய முடியாதே" என்று ஆறுதல் கூறினார்.

முதன்முறை வந்த பைத்தியத்துக்கு மருந்தாகக் கதாதாருக்கு (இராமகிருஷ்ணர்) விவாகம் நடந்தேறியது. அதன்பின்னர் இராமகிருஷ்ணர் பழையபடி ஆழ்ந்த நிஷ்டையில் அமர்ந்துவிட்டார். ஊரார் அவருக்குத் திரும்பவும் பைத்தியம் பிடித்துவிட்டதென்று வதந்திகளைக் கிளப்பிவிட்டனர். அக்கதை சாரதாவின் பிறப்பிடமாகிய ஜெயராம் பட்டியிலும் மறைமுகமாகப் பரவத் தொடங்கிற்று. அவளின் மனக்கவலைக்கோ எல்லையில்லை. அவளுக்கு அப்போது வயது பதினெட்டு இருக்கும். கணவனின் உண்மையான நிலையை அறியவேண்டுமென்று ஆவல் கொண்டாள். ஒருநாளும் நெடுந்தூரம் நடந்தறியாத பெண்மணி எண்பது மைல் தூரத்தைக் காலால் நடந்து மூன்று தினங்களில் முடித்தாள். நேரே தக்கிணேஸ்வரத்திலிருக்கும் கணவனின் அறைக்குள் சென்றாள். ராமகிருஷ்ணர் மிகவும் பரிவுகாட்டி "நீ வந்துவிட்டாயா! ஆ! மதுரநாதர் உயிரோடிருக்குங் காலத்தில் வந்திருப்பின் உன்னை மகாராணி போன்று உபசரித்திருப்பேனே" என்று நன்மொழி கூறினார்.

இவ்விருவரின் ஐக்கியம் இன்பகரமாய் இருந்தபோதிலும் அவர்களின் வாழ்க்கையோ கூரியவாளில் நடப்பது போலிருந்தது. ஒருநாள் இராமகிருஷ்ணர் சாரதாமணியைப் பார்த்து "உனது உள்ளக் கிடக்கையைக் கூறிவிடவேண்டும். சம்சாரசாகரத்தில் என்னை ஆழ்த்துவதற்காகவா நீ இங்கு வந்தாய்" எனக்கேட்டார். அதற்கு அந்தப் புனிதவதியார் "இல்லை; நான் எதற்காக உங்களைச் சம்சாரசாகரத்தில் ஆழ்த்தவேண்டும்? நீங்கள் கடைப்பிடித்தொழுகும் அறநெறிநின்று உங்களுக்கு உதவி புரிவதற்காகவே இங்கு வந்தேன்" எனப் பதில் அளித்தாள். இம் மொழியிலிருந்து சாரதாவின் உண்மைச் சுபாவம் அறியக்கிடக்கின்றது. இது கடன்வாங்கிய ஒளியல்ல. இது உண்மையான, சொந்தமான ஒளியேயாகும். இவ்வம்மையாரின் தனிப் பெருந் தியாகமானது பெண்ணுலகத்துக்கே ஒரு பெரும் மதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. "அவள் அவ்வளவு தூய்மை வாய்ந்தவளா யிருந்தபடியால் நான் அவளுடைய மாயவலையிற் சிக்கிக்கொள்ளாதபடி தப்பக்கூடியதா யிருந்தது" என்று ஒரு சந்தர்ப்பத்தில் இராமகிருஷ்ணர் கூறியிருக்கிறார். ஒருநாள் தேவியார் கணவனின் பாதங்களை வருடிக் கொண்டிருக்கும்பொழுது "நீங்கள் என்னை எவ்வாறு கருதுகின்றீர்கள்" எனக் கேட்டாள். அதற்கு அவர் "கோயிலில் எழுந்தருளியிருக்கும் அன்னையும், இந்த உடம்பை ஈன்றெடுத்த அன்னையும், இப்பொழுது பாதம் வருடும் அன்னையும் ஒரே அன்னையெனக் கருதுகின்றேன்" என ஐயந்திரிபறப் பதிலளித்தார்.

ஆனால் "அவர் உண்மையிலே அவளைத் தெய்வ சொரூபமாகக் கண்டார்" என்பதற்கு அத்தாட்சியென்ன? என்று உலகத்தார் கேட்கக்கூடும். ஆம்; அதற்கும் போதிய அத்தாட்சியிருக்கின்றது. தாந்திரீக சாதனை முறைப்படி சோடசி பூசையொன்றுண்டு. அந்தப் பூசைக்கு ஸ்ரீ சாரதாமணிதேவியாரையே விக்கிரகமாகப் பாவித்து ஸ்ரீ இராமகிருஷ்ணர் அப் பூசையை நடத்தியிருக்கிறார். அப் பூசையிற் கூறப்பட்ட பிரார்த்தனையின்சாரம் "தெய்விக அன்னையே! கன்னியாகுமரி! சர்வ வல்லமை படைத்தவளே! சர்வ அழகுகளுக்கும் இருப்பிடமானவளே பரிசுத்தமாகிய கதவைத் திறப்பதற்கு அருள் புரிவாயாக" என்பதுதான். பூசைமுடிந்ததும் தேவியின் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்துத் தான்பெற்ற பெறுபேறுகள் அனைவற்றையும் அன்னைக்கே அர்ப்பணம் செய்து சரணாகதியடைந்தார்

(தொடரும்)

தொடர்பான
சரித்திர பாடப் புத்தகங்கள்
2-ம், 3-ம், 4-ம், 5-ம் வகுப்புக்குரியன
ஆக்கியோன்:
ச. ஜெயவீரசிங்கம் B. A. (Hons.)
சரித்திர ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

இப்புத்தகங்களை நீங்கள் ஆதரிக்க வேண்டியதற்கு நியாயங்களாவன:

1. வித்தியாபகுதியாரின் பாடத்திட்டத்துக் கமையும்படி இப்புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன.
2. இப்புத்தகங்களில் உபயோகமுள்ள பல சித்திரங்களும் வினுக்களும் இருக்கின்றன. ஒவ்வொரு பாடமும் வெகு சிரத்தையுடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது.
3. உண்மையான சரித்திரமன்றிக் கட்டுக்கதைகள் நீக்கப்பட்டுள்ளன.
4. இப்புத்தகங்கள் இலகுவான நடையி லெழுதப்பட்டன.
5. இப்புத்தகங்களிற் காணப்படும் சில பாடங்கள் ஆரம்ப வகுப்புக்களுக்கென எழுதப்பட்ட வேறு புத்தகங்களில் இல்லை.
6. இப்புத்தகங்களின் விலை மிகவும் சகாயமானது.

ஆசிரியர்களுக்கும் புத்தக வியாபாரிகளுக்கும் தாராளமான கழிவு கொடுக்கப்படும்.

பிரதிகள் பிரபல புத்தக வியாபாரிகளிடமேனும் நூலாசிரியரிடமேனும் பெறற்பாலன.

[3587-Viii]

## தீண்டாமை வேண்டாம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருப்பதால் உசித்திருக்கிறதென்று கூறினார். கடவுளுடைய குழந்தைகளாகிய மக்களுக்கு உயர்வு தாழ்வு பார்ப்பது அறிவற்ற செயலாகும். மேலும் சாதி குலம் என்னும் சொற்கள் வடசொற்களானபடியால் இக் கருத்துக்கள் தமிழருடைய கலாசாரத்துக்கு மாறானவை; இடையில் வந்தவை ஆகையால் அவை போகவேண்டியவை. ஒருவனுடைய தொழிலால் வித்தியாசங்கள் ஏற்படுவதேயொழிய, அவன் பிறப்பால் ஏற்படுவதில்லை. "பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும், சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்."

அடுத்தாண்டில் விவேகானந்த சபை ஆதரவில் கொழும்பில் சைவ சித்தாந்த சமாஜம் கூடுமுன் தீண்டாமை இலங்கையிலிருந்து நீக்கப்படுமென்று தாம் எதிர் பார்ப்பதாகவும் கூறினார்.

திரு அரங்கசாமி முதலியார் பேசுகையில் பொதுவாக மனிதர் சமயத்தைத் தங்கள் ஒழுக்கவீனத்தை மறைப்பதற்கு ஒரு போர்வையாக உபயோகித்து வருகின்றனர் என்று கூறினர். கள்ளச் சந்தையாற் பணம் சம்பாதிப்பவர்கள் தான் தங்களைச் சமயாபிமானிகளாகக் கருதுகின்றனர். உண்மையான சமய வாழ்க்கை வாழ்பவன் இலட்சணம் பின்வரும் பெரிய புராணச் செய்யுளால் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றது:

"சிந்தையிடை யறா அன்பும்
திருமேனி தனிலசைவுங்
கந்தைமிகை யாங்கருத்துங்
கையுழவா ரப்படையும்
வந்திழிகண் ணீர்மழையும்
வடிவிற்பொலி திருநீறும்
அந்தமிலா திருவேடத்
தாசுமெதிர் வந்தணைய."

யாழ்ப்பாணத்தில் ஆலயங்களைப் பாதுகாக்கப் போகின்றோமென்பவர்கள் எத்தனைபேர் அவற்றைப் படித்திருக்கின்றனர். ஆகமங்களின்பேரால் சாதிவித்தியாசம் காட்டுவது சமயத் துரோகமாகும். நாவலர்பேரைப் பறைசாற்றுகிறவர்களில் எத்தனைபேர் அவரின் தியாகவாழ்க்கையை மேற்கொள்ளுகின்றனர். இவர்களின் போலிக் கூச்சலில் மக்கள் மயங்க வேண்டியதில்லை. அநீதிகளை நீக்குவதற்கு எல்லாரும் உழைக்கமுன்வரவேண்டுமென்று கூறினர்.

வழக்கறிஞர் திரு. அ. அருளம்பலம் யாழ்ப்பாணத்திலுள்ள பிற்போக்காளர்சிலரின் பயமுறுத்தலுக்கு அஞ்சாது சமாஜத்துக்கு தலைமைவகிக்க வந்ததற்காக திரு. ம. பாலசுப்பிரமணியமுதலியாருக்கு நன்றிகூறினார். கர்மவீரராகவிளங்கும் காரியதரிசி கா. அரங்கசாமிமுதலியாருக்குத் [illegible] கூறினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இளங்கோவடிகளும் கண்ணகியும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற பாட்டிலே இராமனைத் தேடிச்சென்ற அக்க நிலையில் மைந்தர்க்கேற்றிய வடுவை எங்கு எப்படிப் போக்கினரோ கம்பர் யாமறியேம்.

ஆரணியகாண்டத்தில் இலக்குமணன் தன்னை விரும்பி இராமனைத் தேடிச்செல்ல மறுக்கின்றானென்று சீதை கூறும் பகுதியால் இலக்குமணனுக்கும் சீதைக்கும் ஏற்றப்பட்ட மாசு எப்போது கழுவப்பட்டது?

எனினும் இவை ஆன்றோர் கூற்றுக்களென்று அமைகின்றோம். இவை இக்காலத்திற்குப் பொருந்தாவேனும் கம்பன் கால நெறிபோலும் என்று போற்றிப் புகழ்ந்து கற்கின்றோம்.

'மணந்தாள் புரிகுழலாள் அல்குல்போல் வளர்கின்றதே' என்ற அடி தலைவன் கூற்று. இது நெஞ்சொடு கூறலாதலால் இது பற்றிய ஆராய்ச்சியேயில்லை. கம்பராமாயணத்தில் அது ஒருவரோடொருவர் சம்பாஷிக்கு மிடங்களில் எல்லாம் எடுத்தாளப்படும் ஒரு மருந்தாகக் கொள்ளப்படுகின்றது. இதனைச் சிலர் சாகா மருந்து என்கின்றனர். சிலர் சாகச்செய்யும் நஞ்சு என்கின்றனர். சிலப்பதிகாரத்தை 'நெஞ்சையள்ளுஞ் சிலப்பதிகாரம்' என்று புகழ்ந்த பாரதியார் கம்பனை இகழ்ந்தாரல்லர். 'கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்று கம்பன் பிறந்ததையே தமிழ்நாட்டிற்கு ஏற்றமாகச் சொன்னார் பாரதியார். பாரதியாரை அமரகவியென ஒப்புக்கொள்ளும் வித்துவான் அவர்கள் கம்பனை இகழ்ந்தாரென்று கூறுவது பொருந்தா விவாதமேயென விடுக்க. கம்பன்மேல் அவர் சில சொல்லம்புகள் விடுத்தது இளங்கோவின் மேல் வசையம்பு தொடுத்தார்க்கு உண்மை யறிவுறுத்தவென்றே கொள்கின்றேன்.

'இலக்கியத்துக்கு வரையறை' என்ற தமது கடிதத்தில் இலக்கியத்தைப்பற்றி ஆராய்ந்த நண்பர் 'ஒரு பெண் என்னசெய்தாள் என்பதை நோக்குவது கவியிலக்கணமன்று. என்னசெய்ய வேண்டும் என்பதை நோக்குவதுதான் கவியிலக்கணம்' என்ற பகுதி நகை விருந்தே. கவியிலக்கணம் இவ்வாறிருக்குமேல் கம்பராமாயணத்தில் கூனி, கைகேயி, சூர்ப்பனகை என்போருக்கு என்ன வேலையிருக்கிறது? இவர்கள் என்ன செய்தார்கள், என்பதை நோக்காமல் இவர்கள் என்ன செய்தற் பெண்மைக்கு ஒவ்வும் என்பதையல்லவா கம்பர் பார்க்க வேண்டும். இவ்வாறு நோக்காத கம்பர் இலக்கிய மரபில் தவறிவிட்டார் என்பதுதானே நண்பர் ஆராய்ச்சியின் முடிபாகவேண்டும். கம்பன் ஏன் கூனியைக் கெட்டவளாகச் சிருட்டிக்கவேண்டும். அவளை இராமாயணத்தில் வரும் இரண்டாவது சீதையாகச் சிருட்டித்திருக்கலாமே. அவளுக்கொரு காதல் விவாகமுஞ்செய்து கணவனை வினைவயிற் போக்கியிருக்கலாமே? அவளைக் கூனியென்று வர்ணியாது இரதியும் ஆண்மை வெஃகும் பெண்மை நல்லாள் என்று பாடியிருக்கலாமே. இப்படியாக ஒடுக்கிய நோக்கில் கவிக்கு இலக்கணமமைப்பது பொருத்தமா என்பதை அறிஞர்கள் சிந்திப்பார்களாக.

அன்பர்களே மனம் போனபடி இலக்கியத்துக்கு வரையறை செய்வதும் விபரீத விவாதங்களை எழுப்புவதும் அழகல்ல வென்பதை அறிந்துகொள்ளுங்கள். கண்ணகிமேல் சமத்தினைக்கும் போலிக் குற்றங்கள் பொருந்தாதவையென்பதை இனியாகுதல் அறிந்துகொள்க.

இதுகாறுங் கூறியவற்றால் கண்ணகி தெய்வக் கற்புடையாள் என்பதற்கு மாறாக நண்பர் திரு. வ. நடராசா எழுப்பிய விபரீத விவாதம் அனைத்துமே மறுத்துரைக்கப்பட்டன. வித்துவான் வேந்தனார் கூறியனவற்றை மறுப்பதாகக் கற்பனைபண்ணிப் புதுவிஷயங்கள் பலவற்றை நண்பர் இழுத்தமையால் இத்துணையும் விரித்துரைக்கவேண்டியதாயிற்று. நண்பர் திரு. வ. நடராசா அவர்கள் கூறுவதுபோன்ற மரபுபற்றி வித்துவான் கூறியனவற்றை நண்பர் மறுத்துரைக்க முயன்று முற்றும் பிழைபட்டார் என்று கூறாமல் அறிஞர்களே அனைத்தையும் சீர்தூக்கி முடிவு காண விடுகின்றேன். இனி ஆரிய வழக்கும் தமிழ் வழக்கும் என்ற கட்டுரை ஆராயப்படும்.

யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி
1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம்
ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை:
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்

தினசரிப் பற்று வரவு:
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்:
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்:
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்
S. கனகசபை
சிறுப்பர்
[3575]

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு திருமகள் நிலையம் நா. பொன்னையா அவர்களால் சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில் 1949-ம் ஆ ஜனவரிமீ 2உ ஞாயிறுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# EELAKESARI DESK CALENDAR

# ஈழகேசரிக் 'கலண்டர்', 1949

## குருபூசைத் தினங்கள்

திருநாவுக்கரசுநாயனுர்
—ஏப். 23 (சித். கக – சதயம்) சனி
திருஞானசம்பந்தநாயனுர்
—ஜூன் 11 (வை. உகூ – மூலம்) சனி
மாணிக்கவாசகசுவாமிகள்
—ஜூன் 30 (ஆனி கஎ – மகம்) வியா.
சுந்தரமூர்த்திநாயனுர்
—ஒக. 1 (ஆடி கஎ – சுவாதி) திங்கள்
நாவலர்பெருமான்
—டிஸ. 11 (கார். உகூ – மகம்) ஞாயிறு

## விசேஷ தினங்கள்

தைப்பூசம்—ஜனவரி 15 சனி
மகாசிவராத்திரி—பெப். 26 சனி
மாசி மகம்—மார்ச் 13 ஞாயிறு
பங்குனி உத்திரம்—ஏப். 11 திங்கள்
சித்திரா பூரணை—மே 12 வியாழன்
சிதம்பரம் கொடியேற்றம்
—ஜூன் 23 வியாழன்
மாவிட்டபுரம் கந்தசுவாமி, நயினுதீவு நாகபூஷணி கொடியேற்றம் } ஜூலை 1 வெள்ளி
ஆனி உத்திரம்—ஜூலை 2 சனி
நயினுதீவுநாகபூஷணி தேர் தீர்த்தம் } ஜூலை 10 ஞாயிறு
மாவிட்டபுரம் கந்தசுவாமி தேர், கதிர்காமம் கொடியேற். } ஜூலை 24 ஞாயிறு
ஆடி அமாவாசை—ஜூலை 25 திங்.
நல்லூர்க் கந்தசுவாமி-
கொடி.—ஜூலை 31 ஞாயிறு
„ தேர்—ஒகஸ்ட் 23 செவ்வாய்
கதிர்காமம் தீர்த்—ஒகஸ். 8 திங்கள்
செல்வச்சந்நிதி-
கொடியேற்றம்—ஒகஸ்ட் 24 புதன்
மஹாளய அமாவாசை வல்லிபுரம் கொடியேற் } செப். 22 வியாழன
„ தீர்த்தம்—ஒக். 6 வியா.
சரஸ்வதி பூஜாரம்—செப். 28 புத.
விஜயதசமி—ஒக்டோபர் 1 சனி
ஸ்கந்தசஷ்டி— „ 27 வியாழன்
திருக்கார்த்திகை—டிஸ. 5 திங்கள்
திருவெம்பாவை பூஜாரம்பம் சிதம்பரம் கொடி. } டிஸம்பர் 26 திங்கள்


## ஈழகேசரி

சிறந்த தேசீயத் தமிழ்வெளியீடு
[ஞாயிறுதோறும் வெளிவருவது]

ஆண்டுச்சந்தா ரூபாய் 6–00 :: தனிப்பிரதி சதம் 10

அதிபர், ஈழகேசரி, சுன்னுகம்.


| | JAN. – ஜனவரி | FEB. – பெப்ருவரி | MARCH – மார்ச் | |
|---|---|---|---|---|
| S. | – 2 9 16 23 30 | – 6 13 20 27 — | – 6 13 20 27 — | ஞா. |
| M. | – 3 10 17 24 31 | – 7 14 21 28 — | – 7 14 21 28 — | தி |
| Tu. | – 4 11 18 25 — | 1 8 15 22 — — | 1 8 15 22 29 — | செ. |
| W. | – 5 12 19 26 — | 2 9 16 23 — — | 2 9 16 23 30 — | பு. |
| Th. | – 6 13 20 27 — | 3 10 17 24 — — | 3 10 17 24 31 — | வி. |
| F. | – 7 14 21 28 — | 4 11 18 25 — — | 4 11 18 25 — — | வெ. |
| S. | 1 8 15 22 29 — | 5 12 19 26 — — | 5 12 19 26 — — | ச. |

| | APRIL – ஏப்ரில் | MAY – மே | JUNE – ஜூன் | |
|---|---|---|---|---|
| S. | – 3 10 17 24 — | 1 8 15 22 29 — | – 5 12 19 26 — | ஞா. |
| M. | – 4 11 18 25 — | 2 9 16 23 30 — | – 6 13 20 27 — | தி. |
| Tu. | – 5 12 19 26 — | 3 10 17 24 31 — | – 7 14 21 28 — | செ. |
| W. | – 6 13 20 27 — | 4 11 18 25 — — | 1 8 15 22 29 — | பு. |
| Th. | – 7 14 21 28 — | 5 12 19 26 — — | 2 9 16 23 30 — | வி. |
| F. | 1 8 15 22 29 — | 6 13 20 27 — — | 3 10 17 24 — — | வெ. |
| S. | 2 9 16 23 30 — | 7 14 21 28 — — | 4 11 18 25 — — | ச. |

| | JULY – ஜூலை | AUG. – ஒகஸ்ட் | SEPT. – செப்டம்பர் | |
|---|---|---|---|---|
| S. | – 3 10 17 24 31 | – 7 14 21 28 — | – 4 11 18 25 — | ஞா. |
| M. | – 4 11 18 25 — | 1 8 15 22 29 — | – 5 12 19 26 — | தி. |
| Tu. | – 5 12 19 26 — | 2 9 16 23 30 — | – 6 13 20 27 — | செ. |
| W. | – 6 13 20 27 — | 3 10 17 24 31 — | – 7 14 21 28 — | பு |
| Th. | – 7 14 21 28 — | 4 11 18 25 — — | 1 8 15 22 29 — | வி. |
| F. | 1 8 15 22 29 — | 5 12 19 26 — — | 2 9 16 23 30 — | வெ |
| S. | 2 9 16 23 30 — | 6 13 20 27 — — | 3 10 17 24 — — | ச. |

| | OCT. – ஒக்டோபர் | NOV. – நவம்பர் | DEC. – டிசம்பர் | |
|---|---|---|---|---|
| S. | – 2 9 16 23 30 | – 6 13 20 27 — | – 4 11 18 25 — | ஞா |
| M. | – 3 10 17 24 31 | – 7 14 21 28 — | – 5 12 19 26 — | தி. |
| Tu. | – 4 11 18 25 — | 1 8 15 22 29 — | – 6 13 20 27 — | செ. |
| W. | – 5 12 19 26 — | 2 9 16 23 30 — | – 7 14 21 28 — | பு. |
| Th. | – 6 13 20 27 — | 3 10 17 24 — — | 1 8 15 22 29 — | வி. |
| F. | – 7 14 21 28 — | 4 11 18 25 — — | 2 9 16 23 30 — | வெ. |
| S. | 1 8 15 22 29 — | 5 12 19 26 — — | 3 10 17 24 31 — | ச. |

## அரசாங்க வங்கி விடுமுறை நாட்கள்

ஜனவரி 1 — 3*† (2-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை) - புது வருடம்
„ 13*† - முகமது நபிநாயகம் பிறந்த தினம்
„ 14*† - தமிழ்த் தைப்பொங்கல்
ஏப்ரில் 13*†ம் 14*ம் - சிங்கள தமிழ்ப் புதுவருடம்
„ 14† - மோண்டி வியாழன்
¶ „ 15—18*†ம் 19*ம் - ஈஸ்டர்
மே 11ம் 12*†ம் - புத்த விசாகம்
ஜூன் 9*† - அரசர் பிறந்த தினம்
„ 10*† - புத்த போசன்
ஜூலை 1† - வங்கி விடுமுறை
„ 25* - ஆடி அமாவாசை
„ 27*† - ரம்ஸான்
ஒகஸ்ட் 8ம் 9†ம் - வேல்விழா
ஒக்டோபர் 3*† - முஸ்லிம் ஹஜ்ஜிப் பண்டிகை
„ 21† - தீபாவளி
டிசம்பர் 24 — 28*† (25உ ஞாயிற்றுக்கிழமை) 29 — 31* - கிறிஸ்துமஸ்

* அரசாங்க விடுமுறை நாட்கள்
† வங்கி விடுமுறை நாட்கள்
¶ ஏப்ரில் 19-ம் தேதி விடுமுறை உள்நாட்டுமந்திரியின் விருப்பத்தைப்பொறுத்தது.

## அமாவாசை–பௌர்ணமி நாட்கள்

ஜனவரி
14உ வெள்ளிக்கிழமை ○
28உ வெள்ளிக்கிழமை ●
பெப்ருவரி
13உ ஞாயிற்றுக்கிழமை ○
27உ ஞாயிற்றுக்கிழமை ●
மார்ச்
14உ திங்கட்கிழமை ○
29உ செவ்வாய்க்கிழமை ●
ஏப்றில்
12உ செவ்வாய்க்கிழமை ○
27உ புதன்கிழமை ●
மே
12உ வியாழக்கிழமை ○
27உ வெள்ளிக்கிழமை ●
ஜூன்
10உ வெள்ளிக்கிழமை ○
26உ ஞாயிற்றுக்கிழமை ●
ஜூலை
9உ சனிக்கிழமை ○
25உ திங்கட்கிழமை ●
ஒகஸ்ட்
8உ திங்கட்கிழமை ○
24உ புதன்கிழமை ●
செப்டெம்பர்
7உ புதன்கிழமை ○
22உ வியாழக்கிழமை ●
ஒக்டோபர்
6உ வியாழக்கிழமை ○
21உ வெள்ளிக்கிழமை ●
நவம்பர்
5உ சனிக்கிழமை ○
20உ ஞாயிற்றுக்கிழமை ●
டிஸம்பர்
5உ திங்கட்கிழமை ○
19உ திங்கட்கிழமை ●

## தபால் விகித மாற்றம்

24-1-'49-ன் மேல்

உள்நாட்டுத் தபால் முதல் ½ அவுன்ஸுக்கு 5 சதமும், அடுத்த 1 அவுன்ஸுக்கு 10 சதமும், 1½ அவுன்ஸுக்கு மேற்படும் ஒவ்வோர் ½ அவுன்ஸுக்கும் 5 சத வீதமும் முத்திரை ஒட்டப்படவேண்டும்.

திறந்த கடிதம் முதலியவை: ஒவ்வொரு 2 அவுன்ஸுக்கும் 4 சதம்.

பார்சல்களுக்கு முதல் 1 இறுத்தலுக்கு 30 சதமும், அடுத்த ஒவ்வொரு இறுத்தலுக்கு 15 சதமும்.

றிஜிஸ்டர்: 20 சதம்.

எக்ஸ்பிறெஸ்: 35 சதம்.

இன்ஸுரன்ஸ்: 50 ரூபாய் வரையில் 25 சதம், மேற்படும் தொகைக்கு இரட்டைச் சலார்.

—Thirumakal Press, Chunnakam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org